விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 283 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 11 வியாழக்கிழமை (28.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## பொருளாதார மீட்சி உறுதி செய்யப்படவில்லை 2ஆம் தவணை நிதி வழங்குவது சந்தேகமே

### சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)
இலங்கையின் முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை. எனவே 2ஆம் தவணை நிதி வழங்குவது சந்தேகமே என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.
இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான 16



### ஆளுநரின் தடை உத்தரவை மீறி

## திருமலையில் இரவிரவாக விகாரைக் கட்டுமானம்



(திருகோணமலை)
திருகோணமலை இலுப்பைக்குளத்தில் ஆளுநரின் உத்தரவை மீறி இரவோடு இரவாக விகாரைக் கட்டுமானப் பணி இடம்பெற்று வருவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.
*(15ஆம் பக்கம் பார்க்க)*

## மதுபானசாலைகள் யாழுக்கு வேண்டாம்

### ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கோரிக்கை நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக எந்த ஒரு மதுபானசாலையும் அமைக்க அனுமதி வழங்கக்கூடாது என யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவினால் தீர்மானம் எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் 15

### இலங்கை கடற்படை

## இந்திய மீனவர்களை கைது செய்ய தயக்கம்

(யாழ்ப்பாணம்)
"இந்திய மீனவர்களைக் கைது செய்யும் செயற்பாட்டில் இலங்கை கடற்படையினர் தயக்கம் காட்டுகின்றனர்" என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.
சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் நேற்று இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட் 15

### முல்லையில் புலிகளின்


## தங்கம், ஆயுதங்கள் தேடும் பணி முடிவு



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் தங்கம் மற்றும் ஆயுதங்கள் தேடும் பணி முடிவுக்கு கொண்டு வரப் 15

### தமிழக மீனவர்களை கட்டுப்படுத்த

## தமிழக முதலமைச்சரோடு தமிழ் எம்.பிக்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் - டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)
சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் தமிழக மீனவர்களை கட்டுப்படுத்த தமிழக முதலமைச்சரோடு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று புதன்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் 15

## தையிட்டி விகாரைக்கு எதிராக இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)
தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு எதிராக இன்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் ஒவ்வொரு பௌர்ணமி தினங்களிலும் நடைபெறும் இப்போராட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் 6 மணிக்கு நிறைவு பெறும்.
எனவே இதில் அனைத்து மக்களை 15

## வல்லிபுர ஆழ்வாருக்கு

### இன்று தேர்த்திருவிழா

(கரணவாய்)
வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.45 மணியளவில் இடம்பெறவுள்ளது.
அதிகாலை வசந்த மண்டபப்பூஜை இடம்பெற்று வல்லிபுரப் பெருமான் 15

### இலங்கையில் ஒரே நாளில்

## 13 பேருக்கு நீதிமன்றால் மரண தண்டனை

(கொழும்பு)
இலங்கையில் ஒரே நாளில் வெவ்வேறு நீதிமன்றங்களால் வெவ்வேறு குற்றச்சாட்டில் 13 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.
கொலைக் குற்றச்சாட்டு மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் என இரு வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களின் குற்றம் சந்தேகத்திற்கு 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

நீங்காத நினைவுகளுடன்
1 வது ஆண்டு நினைவு நாள்



வானில் நிலா காட்டி வாயிலமுதூட்டி
வளர்த்த எம் அன்னையே...

அமரர் ஆறுப்பிள்ளை
செல்லம்மா

ஆண்டுகள் பல கடந்தாலும்
எம் நெஞ்சங்களில் எப்போதும்
நிலைத்து வாழ்வீர்கள்...

(C-7342)

இல.59, கந்தபுரம்
கிளிநொச்சி.

தகவல்
குடும்பத்தினர்


தோற்றம் 01.08.1952
மறைவு 08.10.2022



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

மரண அறிவித்தல்

திரு.சுப்பிரமணியம் பரராஜசிங்கம்



தோற்றம் 26.11.1937
மறைவு 27.09.2023

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சுப்பிரமணியம் பரராஜசிங்கம் அவர்கள் 27.09.2023 நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை(28.09.2023) பி.ப 1.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1010/37, கே.கே.எஸ்
வீதி, அரசடி,
யாழ்ப்பாணம். (17268)

தகவல் :
குடும்பத்தினர்



9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13 - 09 - 1970
மறைவு 28 - 09 - 2014

அமரர் திருமதி
பாமதி அமிர்தகுமார்

(ஆசிரியை - அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

பாமதி என்னும் நாமம் பெற்று
பாசமும் நேசமும் பரிவுடன் கொடுத்து
பாடம் தமிழைப் பலருக்கு அளித்து
அன்புதனை மழையாய்ப் பொழிந்து
அரிய உயிரை அதிர்வாய் இழந்தாய்
அழும் எங்கள் இதயம் சிதைத்து
அரன் பாதம் தஞ்சம் கொண்டாய்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(17245)


## 225 எம்.பிக்களும் ஒன்றிணைந்தால்
# போதைப்பொருள் இல்லாத நாட்டை உருவாக்கலாம் - சஜித்

(கொழும்பு)

225 பாராளுமன்ற உறுப்பினர்களும் சம்மதித்தால், மது,புகையிலை,சிகரெட் மற்றும் போதைப்பொருள் பாவனையில்லா நாட்டை உருவாக்க முடியுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை பெறுவதற்கான விசேட பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், VIP வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி விமான நிலையத்தில் இருந்து தங்கம் கொண்டு வந்த எம்பிக்கு எதிராக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக தீர்மானம் கொண்டு வந்ததைப் போன்று, போதைப்பொருள் பாவனையில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைய வேண்டும்.

மேலும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக சிங்கப்பூரில் உள்ளதைப் போன்று கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதன்மூலம் தற்போதைய பாடசாலை கட்டமைப்பை ஆட்கொண்டுள்ள போதைப்பொருள் கடத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும் என சஜித் தெரிவித்துள்ளார். (ம-7)

# ஜனாதிபதி ரணில் ஜெர்மன் பயணம்
## 5 பதில் அமைச்சர்கள் நியமனம்

ஜெர்மனியின் பெர்லின் நகரில் நடைபெறவுள்ள பெர்லின் உலகளாவிய மாநாட்டில் (Berlin Global Dialogue) கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை நாட்டிலிருந்து புறப்பட்டுச்சென்றார்.

இன்றும் (28) நாளையும் (29) இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜெர்மனிக்கு சென்றுள்ள ஜனாதிபதி, பெர்லின் உலகளாவிய மாநாட்டில் உலக நாடுகளின் தலைவர்களுடன் ஒன்றிணைந்து வர்த்தகம் மற்றும் பிரத்தியேகத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார்.

ஜெர்மன் அதிபர் Olaf Scholz-இன் தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜெர்மன் அதிபருக்கிடையிலான சந்திப் பொன்றும் இதன்போது நடைபெறவுள்ளது.

இதனிடையே, ஜனாதிபதியின் கீழ் உள்ள அமைச்சுகளின் பணிகளை கண்காணிப்பதற்காக 5 பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, பதில் நிதியமைச்சராக ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஜெர்மனுக்கான உத்தியோகபூர்வ விஜயம் நிறைவுபெறும் வரை நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசியக் கொள்கை அமைச்சின் கடமைகளை ஆற்றுவதற்காக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் பதில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தொழில்நுட்ப பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல், பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7)


வாடகைக்கு தேவை

யாழ் நகரை (பிரதான வீதி
அண்டியுள்ள பகுதிகளில்
அலுவலகம் நடாத்துவதற்கான
இடம் ஒன்று வாடகைக்கு
தேவைப்படுகிறது.

தொடர்புகொள்ள (17259)
076 125 4310
077 887 6969



Romania வேலைவாய்ப்பு விசா

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

Hybrid International hub (pvt) Ltd, Jaffna
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7340)

021 222 1265,076 250 0098



நூலகவியல் சார் தொழிற்துறையினர் மற்றும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் - 29.09.2023

வட மாகாணத்திலுள்ள நூலகங்கள், தகவல் வள நிலையங்கள், உயர்கல்வி நிறுவனங்களில் கடமையாற்றும் பொது நூலகர்கள், ஆசிரிய நூலகர்கள், நூலகத்தொழிற்துறையினர் மற்றும் நூலகவியல் துறையில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக சமூக விரிவாக்கல் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நாளை வெள்ளிக்கிழமை (29.09.2023) காலை 10.30 - 12.30 மணிவரையும் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் நூலகவியல் சார் தொழிற்துறையினர் எதிர் கொள்ளும் நெருக்கடிகள், கல்வி வாய்ப்புக்கள், வேலை வாய்ப்புக்கள், தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
28.09.2023

(C-7339)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்

# கடும் எதிர்ப்பை வெளிப்படுத்த தயாராகும் மேற்கத்தேய நாடுகள்

**(கொழும்பு)**

**பயங்கரவாத எதிர்ப்பு யோசனை மற்றும் இணைய பாதுகாப்பு யோசனை குறித்து, இலங்கை அரசாங்கத்தின் மீது கடுமையான கரிசனையை வெளிப்படுத்த மேற்கத்தேய நாடுகள் தயாராகி வருகின்றன.**

தங்களின் சட்ட வல்லுநர்களுடன் ஆய்வு செய்த பின்னர் அந்த நாடுகள் இந்த நிலைப்பாட்டுக்கு வந்துள்ளன.

சர்வதேச தரநிலைகள் மற்றும் விதிமுறைகளை புறக்கணித்த பயங்கரவாத எதிர்ப்பு யோசனையில், பயங்கரவாதத்தின் வரையறை மிகவும் விரிவானது என்று இந்த நாடுகளின் வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர்.

தற்போதைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் துஷ்பிரயோகங்கள் மற்றும் தன்னிச்சையான காவலில் வைப்பதற்கு புதிய வரைபு இன்னும் வாய்ப்பளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அரசாங்கம், பயங்கரவாத எதிர்ப்பு யோசனையை அறிமுகப்படுத்தியது. எனினும் மேற்கத்தேய நாடுகளின் விமர்சனங்களைத் தொடர்ந்து, அது திருத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் யோசனையின் புதிய பதிப்பிற்கு எதிராக தற்போது மேற்கத்தேய நாடுகள் ஆயுதம் ஏந்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## அதிபர்களுக்கான வெற்றிடங்களை பூர்த்தி செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கான 4,718 வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக கல்வி அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த ஆட்சேர்ப்பிற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான இடைக்கால தடை உத்தரவு வாபஸ் பெறப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விடயத்துடன் தொடர்புடைய மேலும் சில மனுக்களை வாபஸ் பெறுவதற்கு மனுதாரர்களினால் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் ஆட்சேர்ப்பு தொடர்பான சுற்றுநிருபத்தை இடைநிறுத்துமாறு உயர்நீதிமன்றத்தினால் இதற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவும் நேற்று நீக்கப்பட்டது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (நி-5)

## உயர்தரப் பரீட்சை தொடர்பில் திங்கட்கிழமை இறுதித் தீர்மானம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான திகதிகள் தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை உயர்தரப் பரீட்சைக்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ள திகதிகள் திருத்தப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்னதாக குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது . (நி-5)

## 12 கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்துடன் ஐவர் கைது

(கொழும்பு)

12 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கடத்திய 4 பெண்கள் உள்ளிட்ட 5 பேர் விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 5 பேரும் துபாயிலிருந்து நேற்று இரண்டு விமானங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள்அனைவரும் கொழும்பு பிரதேசத்தில் வசிப்பவர்கள் என்பதுடன் அடிக்கடி விமானங்களில் பயணிக்கும் வர்த்தகர்கள் குழுவென விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

6 கிலோ எடையுள்ள நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுகளை உடலிலும் பயணப் பொதிகளிலும் மறைத்து வைத்திருந்த போது, சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் கைது செய்யப்பட்ட 5 பேரையும் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5)

## திடீரென அதிகரித்த ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலர் உள்ளிட்ட பல்வேறு வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதியில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 328.90 ரூபாவாகவும் கொள்வனவு விலை 318.26 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 244.82 ரூபாவாகவும் கொள்வனவு விலை 233.88 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-5)

# புலம்பெயர் தேசங்களில் நடைபெற்ற தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள்







தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு லண்டனில் உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றதுடன் டென்மார்க்கில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநகர் பாடும்மீன் அணி வெற்றி



குருநகர் பாடும்மீன் அணி அரையிறுதி போட்டிக்கு தெரிவாகியுள்ளது. இளவாலை வருத்தப்படாத வாலிப சங்கம் தனது 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 9 பேர் உள்ளடக்கிய "வாலிப கிண்ணம்" உதைபந்தாட்ட போட்டி தொடர் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. போட்டி ஆரம்பத்தில் இருந்து சிறப்பான ஆட்டத்தினை வழங்கிய பாடும் மீன் அணியானது ஆட்ட நேர முடிவில் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (5-6-106)

## இறுதிப் போட்டிக்கு தெரிவான மாலை சந்தை மைக்கல் அணி



பருத்தித்துறை வீனஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு மாலை சந்தை மைக்கல் அணி தகுதி பெற்றுள்ளது.

வல்வெட்டித்துறை நெடியகாடு விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் அணிக்கு 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கட் சுற்றுப் போட்டியில் லீக் முறையில் இடம்பெற்ற போட்டியில் மாலை சந்தை மைக்கல் அணி ஐந்து போட்டிகளில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றது.

அண்மையில் இடம் பெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் பலம்வாய்ந்த பருத்தித்துறை வீனஸ் அணியை எதிர்த்து மோதியது. முதலில் ஆடிய மாலை சந்தை மைக்கல் அணி 10 ஓவர்களில் 77 ஓட்டங்களை பெற்றது. இதில் ரகுவரன் 24, கனுசன் 17, வினோத்ராஜ் 13, ராகவன் 12 ஓட்டங்களை பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய வீனஸ் அணி 10 ஓவர்களில் 64 ஓட்டங்களை பெற்றது. மைக்கல் அணியின் பந்துவீச்சு சார்பில் அனோஜன் 4, அபிநாத் 2, தாஸ் 1 விக்கெட்களை வீழ்த்தினர். இறுதியில் 13 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது மாலை சந்தை மைக்கல் அணி. மேலும் ஒன்பது போட்டிகளிலும் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6-60)

## சுஹாய் சம்பியன்ஷிப் போட்டி இரட்டையர் பட்டம் வென்ற முர்ரே-வீனஸ்



சுஹாய் சம்பியன்ஷிப் தொடரில் பிரிட்டனின் ஜெமி முர்ரே மற்றும் நியூசிலாந்து வீரர் மைக்கேல் வீனஸ் ஜோடி நான்காவது முறையாக ஆடவர் இரட்டையர் பட்டத்தை வென்றுள்ளது.

அமெரிக்க ஜோடியான நதானியேல் லாம்மன்ஸ் மற்றும் ஜாக்சன் வித்ரோவை 6-4, 6-4 என்ற கணக்கில் ஒரு மணி நேரம் 22 நிமிடங்களில் வீழ்த்தி இந்த வெற்றியை பதிவு செய்துள்ளனர்.

சீனாவில் பெற்றுக் கொண்ட இந்த வெற்றியின் மூலம் ஏடிபி இரட்டையர் அணி தரவரிசையில் இந்த ஜோடி 3,325 புள்ளிகளுடன் மூன்று இடங்கள் முன்னேறி ஒன்பதாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதேவேளை இந்த வாரம் இடம்பெறவுள்ள நிட்டோ ஏடிபி இறுதிப் போட்டிக்கான தகுதி வாய்ப்புகளை உயர்த்துவதே தமது நோக்கம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

டல்லஸ், பாஞ்சா லூகா மற்றும் ஜெனிவாவிலும் வெற்றி பெற்று இந்த ஜோடி இந்த ஆண்டு நான்கு முறை பட்டங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## உலகக்கிண்ணத்துக்கான இலங்கைக்குழாம் அறிவிப்பு

2023 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்கான 15 பேர் கொண்ட தனது அணியை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

அதன்படி தசுன் ஷானக்க தலைமையிலான இந்த அணிக்கு குசல் மெண்டீஸ் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த அணியில் காயம் காரணமாக கேள்விக் குறியாகவிருந்த வனிந்து ஹசரங்க, மகேஷ் தீக்ஷன மற்றும் தில்ஷான் மதுசங்க ஆகியோர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இலங்கை அணிவீரர்களின் விபரம் வருமாறு.

தசுன் ஷானக்க (தலைவர்), குசல் மெண்டிஸ் (உப தலைவர்), பத்தும் நிஷ்ஷங்க, குசல் ஜனித் பெரேரா, திமுத் கருணாரத்ன, சரித அசலங்க, தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்கரம, வனிந்து ஹசரங்க, மகேஷ் தீக்ஷன, துனித் வெல்லலாகே, கசுன் ராஜித, தில்ஷான் மதுஷங்க, மதீஷ பத்திரன மற்றும் லஹிரு குமார ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர். (5-6)

## ஆசிய விளையாட்டு பதக்க பட்டியலில் சீனாவின் ஆதிக்கம்



ஆசிய விளையாட்டுப் போட்டியின் பதக்கப் பட்டியலில் போட்டியை நடத்தும் சீனா தொடர்ந்தும் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

58 தங்கம், 31 வெள்ளி, 13 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தம் 102 பதக்கங்களை வென்று, சீனா முதலிடத்தை தக்கவைத்துள்ளது.

இதனை தொடர்ந்து தென் கொரியா 15 தங்கம், 16 வெள்ளி, 21 வெண்கலம் என மொத்தம் 52 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

மூன்றாவது இடத்தை பிடித்துள்ள ஜப்பான் 9 தங்கம், 21 வெள்ளி, 21 வெண்கலம் என 51 பதக்கங்களுடனும் உஸ்பெகிஸ்தான் மற்றும் கொங்கொங் ஆகிய நாடுகள் நான்கு மற்றும் 5 ஆவது இடங்களை பிடித்துள்ளன.

மொத்தம் 14 பதக்கங்களுடன் இந்தியா பதக்கப்பட்டியலில் 7 ஆவது இடத்திலும், இலங்கை வெள்ளிப்பதக்கத்துடன் 23 வது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## இருபது-20 போட்டியில் புதிய சாதனை படைத்த நேபாளம்

சீனாவில் இடம்பெறும் ஆசிய விளையாட்டுப் போட்டியின் ஆடவருக்கான கிரிக்கெட் தொடரில் நேபாள அணியின் வீரர் திபேந்திரா சிங் 9 பந்துகளில் அரை சதம் கடந்து சாதனை படைத்துள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியின் ஆடவருக்கான கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் மொங்கோலியாவிற்கு எதிராக இடம்பெற்ற போட்டியில் நேபாளம் அணி 273 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாளம் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 314 ஓட்டங்களை அதிரடியாக பெற்றுக்கொண்டது.

அவ்வணி சார்பாக 9 பந்துகளை எதிர்கொண்ட திபேந்திரா சிங் 8 ஆறு ஓட்டங்கள் அடங்களாக அதிவேக அரை சதத்தை எட்டினார்.

இதன்மூலம் சர்வதேச இருபது-20 கிரிக்கெட் வரலாற்றில் அதிவேக அரை சதம் கடந்த வீரர் என்ற சாதனையை திபேந்திரா சிங் தன்வசப்படுத்தியுள்ளார்.

அத்துடன் சர்வதேச இருபது-20 போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களை குவித்த அணி என்ற சாதனையையும் நேபாளம் அணி பெற்றுள்ளது.

இதனை தொடர்ந்து இமாலய இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மங்கோலியா அணி 13.1 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 41 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியை தழுவியது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு பிரான்ஸ் அரசாங்கம் ஆதரவளிக்கும்

(அராலி)

வடமாகாணத்தின் உட்கட்டமைப்பு மற்றும் பொது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் பிரான்கொயிஸ் பக்டேட் தெரிவித்துள்ளார்.



வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று ஆளுநரை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது வடமாகாண மக்களின் பொதுவான உட்கட்டமைப்பின் வளர்ச்சி மற்றும் பிற வளர்ச்சி செயல்முறைகள் தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் இப்பகுதி சிறுவர்களின் கல்வி வசதிகளை மேம்படுத்துவதற்கு பிரான்ஸ் அரசாங்கம் பூரண அனுசரணையை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

வடக்கில் தற்போதைய நிலைமை குறித்து ஆளுநர் பிரான்ஸ் தூதுவரிடம் விளக்கி கூறினார். மேலும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத் திட்டம் தொடர்பில் தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் பிரான்ஸ் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.(5-6-104)

# இலங்கை மத்திய வங்கியில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி முகாமைத்துவ பயிலுனர்களுக்கான வேலைவாய்ப்பை அறிவித்துள்ளது.

30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் குறித்த வெற்றிடத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரர் ஒரு போட்டிப் பரீட்சையை எதிர்கொள்வதுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நேர்முகத் தேர்வுகளை எதிர்நோக்க வேண்டுமென இலங்கை மத்திய வங்கி குறித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களை https://shorturl.at/bdDZ6 எனும் இணையத் தளத்தினூடாக பார்வையிடலாம். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 500 |
| தக்காளி | 180 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 180 | 200 |
| கோவா | 160 | 120 | 150 | 200 |
| கரட் | 250 | 240 | 250 | 300 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 160 | 180 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 200 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 160 | 200 |
| பயற்றங்காய் | 150 | 100 | 160 | 160 |
| லீக்ஸ் | 160 | 130 | 150 | 160 |
| பீற்றூட் | 150 | 120 | 180 | 200 |
| கறிமிளகாய் | 300 | 350 | 280 | 350 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 150 | 150 |
| போஞ்சி | 400 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 60 | 120 |
| தேசிக்காய் | 1000 | 1200 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 480 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 300 | 300 | --- | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 60 | 150 |

# மேலும் 50 எரிபொருள் நிலையங்கள் அமைக்க சீனாவுக்கு அனுமதி

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர



(கொழும்பு)

சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு இலங்கையில் மேலும் 50 எரிபொருள் நிலையங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தினால் சினோபெக் நிறுவனத்துக்காக 150 எரிபொருள் நிலையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 145 எரிபொருள் நிலையங்களை பொறுப்பேற்பதற்கு அந்த நிறுவனம் கைச்சாத்திட்டுள்ளது.

தற்போது, மேலும் 50 நிலையங்களை அமைப்பதற்காக சினோபெக் நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் ஏதேனும் கோரிக்கைகள் இருந்தால் வழங்குநர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுடனான ஒப்பந்தங்களைப் பரிசீலிக்க தயாராக உள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (நி-5)

# இராசிபலன்

28.09.2023
புரட்டாதி 11, வியாழக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 6.47 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 2.54 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
நபிகள் நாயகம் பிறந்த தினம்

நடேசர் அபிசேகம்
சந்திராஷ்டமம்: ஆயில்யம்

வளவன்




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.




அரச வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.




எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பகையொன்று நட்பாகலாம், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பயணங்கள் கைகூடும்.




உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, விரயங்கள் மேலோங்கும் நாள்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும் வாய்ப்புண்டு, கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.




நண்பர்களின் ஒத்துழைப்பால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், தொழில் அதிகாரிகளின் ஆதரவு பெருகும், வாக்கு மேன்மையுண்டு.




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்களால் வேலைச் சுமை அதிகரிக்கலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள்.




குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், தொழில் வியாபாரத்தில் சிறு மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

உத்தம [illegible] ஒரு கிரீடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணல் அகழ்வை கட்டுப்படுத்துமாறு கோரியும் எவ்வித தீர்மானமும் எட்டப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த நாகர்கோவில் பகுதியில் பொலிஸ் காவலரணை அமைக்குமாறு நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்தும் இதுவரையில் காவலரண் அமைக்கப்படவில்லை என மருதங்கேணி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட செயலகத்தில் நேற்று புதன்கிழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

அதன்போதே பிரதேச செயலரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் உள்ள குடத்தனை, நாகர் கோவில் மற்றும் மணற்காடு பகுதிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோதமான மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அதனால் அப்பகுதிகளில் கடல் நீர் உட்புகக்கூடிய அபாய நிலைமை காணப்படுவதுடன், குடிநீர் உவர் நீராக மாறும் அபாயமும் காணப்படுகிறது. அதனால் அப்பகுதியில் இடம் பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துமாறு தொடர்ச்சியாக பொது மக்கள் எம்மிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர் என தெரிவித்தார். (5-6-33)

## எலிக்காய்ச்சல் தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு

(சாவகச்சேரி)

பூநகரிப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கான எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இடம் பெற்ற இக்கருத்தமர்வில் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் துஷ்யந்தன் மற்றும் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றெனால்ட் ஆகியோர் விவசாயிகளுக்கான விழிப்புணர்வுகளை வழங்கினர்.

தற்போது பருவகாலப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கவுள்ளதால் தொற்றுடைய எலிகளின் சிறுநீர் நீருடன் கலந்து வயல் வேலையில் வெற்றுகால்களுடன் ஈடுபடும்போது எலிக் காய்ச்சல் நோய் ஏற்படலாம். இந் நோய்க்கு உரிய சிகிச்சை உரிய நேரத்தில் பெறாதுவிடின் அங்க செயலிழப்புகள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் நிகழலாம்.

வயலில் எலிகளைக் கட்டுப்படுத்துவதற்காக எலிகளை வேட்டையாடும் பறவைகள், ஊர்வனவற்றின் வரவை அதிகரிக்கும் வழிகளைக் கையாளுதல், வரம்பை அண்டிய புற்றுக்களை அகற்றுதல், முழங்கால் வரை மூடிய நீர்கசியாத காலணிகள் மற்றும் கையுறைகளை அணிதல் மற்றும் நோய் பரவுகின்ற பகுதியிலுள்ளோர் முற் பாதுகாப்பிற்கான மருந்துகளை உரிய வைத்திய ஆலோசனையுடன் பெற்று முற்பாதுகாப்பாகவும் இருக்க முடியும் என மேலும் தெரிவித்திருந்தனர். (5-6-30)

## நெடுந்தீவில் கைதான இந்திய மீனவர்கள் விடுதலை

(கரணவாய்)

எல்லை தாண்டி மீன்பிடித்த தமிழக மீனவர்களை நிபந்தனைகளுடன் விடுதலை செய்து ஊற்காவற்றுறை நீதிமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இராமேஸ்வரம் மற்றும் ஜெகதாபட்டிணத்தில் இருந்து கடந்த 13ஆம் திகதி மீன்பிடித்த மூன்று விசைப்படகையும் அதிலிருந்த 17 மீனவர்களையும் கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக நெடுந்தீவு கடற்பகுதியில் வைத்து கைது செய்திருந்தனர்.

மீனவர்களின் வழக்கு மீண்டும் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் மீனவர்களிற்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத் தண்டனை என்ற நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்து உத்தரவிட்டார். (5-6-60)



யாழ்.இராமநாதன் கல்லூரியின் மருத்துவத்துறை, பொறியியல் துறை, வர்த்தகத்துறை, கலைத்துறை ஆகியவற்றுக்கு தெரிவான 22 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பழைய மாணவர்களால் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2924

தர்சன்




விஜி




நிலான்




யதுசன்




ரேவதி




சாரங்கா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டுதோறும் 900 சிறுவர்கள்

# புற்றுநோயால் பாதிப்பு

## புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்

**(கொழும்பு)**

**ஆண்டுதோறும் சுமார் 900 சிறுவர்களுக்கு புற்றுநோய் பாதிப்புகள் கண்டறியப்படுவதாக சசுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.**

"சிறுவர் புற்றுநோய் என்பது பிறந்தது முதல் 19 வயது வரை உள்ளவர்களுக்கு ஏற்படும் புற்றுநோயாகும்.

புதிதாக 471 சிறுவர்கள் மற்றும் 454 சிறுமிகள் குழந்தை பருவ புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 800 முதல் 900 நோயாளிகள் கண்டறியப்படுகிறார்கள். பெரும்பாலான புற்றுநோய்களை சிகிச்சையின் மூலம் குணப்படுத்த முடியும்.

வயது வந்தோருக்கான புற்றுநோய்களுடன் ஒப்பிடுகையில், குழந்தை பருவ புற்றுநோய்கள் 80% முதல் 90% வரை குணப்படுத்தக் கூடியவை என வைத்தியர் சுராஜ் பெரோரா தெரிவித்தார். (நி-5)

# கோடிக்கணக்கில் தங்கத்தை அடகு வைக்கும் மக்கள்

(கொழும்பு)

நாட்டு மக்கள் இவ்வருடத்தின் முதல் எட்டு மாத காலப் பகுதிக்குள் 19,000 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை அடகு வைத்துள்ளதாக தேசிய தொழிற்சங்க நிலையத்தின் அழைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சமீபத்திய ஆய்வு அறிக்கையில் இந்த தகவல் தெரியவந்துள்ளதாக, கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் 11 இலட்சம் குடும்பங்கள் தமது வீட்டு உபயோகப் பொருட்களை விற்பனை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அனைத்து நாட்டு மக்களும் கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு ஓரளவு நிவாரணம் பெறுவதற்கு 20,000 ரூபா கொடுப்பனவை வழங்குமாறு அரசாங்கத்திடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கம் அவ்வாறு வழங்காவிட்டால் மீண்டும் போராட்டங்கள் நடத்தப்படும் எனவும் வசந்த சமரசிங்க எச்சரித்துள்ளார். (நி-5)

# அரிசி இறக்குமதிக்கு அவசியமில்லை

## விவசாய அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் வருடாந்த அரிசித் தேவை சுமார் 24 இலட்சம் மெற்றிக்தொன் ஆகும். எனவே, 7 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி தேவைக்கு அதிகமாக உள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த பெரும்போகம் மற்றும் சிறுபோகத்தில் மொத்த நெல் அறுவடை சுமார் 52 இலட்சம் மெற்றிக் தொன்னாக பதிவாகியுள்ளது.

இதன்படி அடுத்த பெரும்போக அறுவடை வரை அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

# 4 வயதுக் குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி கட்டாயம்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நான்கு வயது பூர்த்தியாகும் குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி கட்டாயமாக்கப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

முன்பருவக் கல்விக்கான கட்டணம் செலுத்த முடியாத குழந்தைகள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும்.

தேவையின் அடிப்படையில் இடவசதி உள்ள தொடக்க பாடசாலைகளில் முன் குழந்தை பருவ மேம்பாட்டு மையங்களை நடத்தலாம்.

இது மூடப்படும் அச்சுறுத்தலை எதிர்நோக்கும் பாடசாலைகளுக்கு தீர்வாக அமையும் என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



நான்கு நாள் விடுமுறையை முன்னிட்டு விசேட பயிற்சிகள்

மாணவர்கள் மற்றும் அரசஉத்தியோகத்தர்களுக்காக

"வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்"

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

பெருமையுடன் வழங்கும் சாதாரண மனிதனை முழுமனிதனாக்கும்

மனவளக்கலையின் ஆரம்ப திறனுக்கபயிற்சிகள்

காலம் :- Sep 28 முதல் Oct 1 வரை

நேரம் :- காலை 9.00 - 12.00 மணி வரை

❋ உடல் நலத்திற்கு ⇒எளியமுறை உடற்பயிற்சிகள்
❋ உயிர் வளத்திற்கு ⇒சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
❋ மன அமைதிக்கு ⇒தியானப்பயிற்சிகள்
❋ அறிவு வல்லமைக்கு ⇒அகத்தாய்வு பயிற்சிகள்
❋ உறவுகள் மேம்பட ⇒தற்சோதனைப் பயிற்சிகள்

பயிற்சிகளை வழங்குபவர்

தமிழ்நாடு வேதாத்திரிய பல்கலைக்கழக விரிவுரையாளர்
பேராசிரியர் அருள்நிதி C.ராம்குமாரி அவர்கள்

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் தமிழ்நாட்டில் இருந்து வருகை தரும் பேராசிரியர்களால் மனவளக்கலை யோகா பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை மாலை 5 .00 மணிக்கு ஆரம்பமாகி வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல 81 பிறவுண் வீதி கொக்குவில் கிழக்கு கொக்குவில் யாழ்ப்பாணம்
தொ.இல :- 0212222772,0768571395,0771235646,0714403268,0777368745

(c-7338)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா: 42<br>உயரம்: 5' 11<br>தகைமை/தொழில்:IT Project Management IT Analyst<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு. உள்நாடு எனின் (Doctor, lectuerer)<br>தொ.இ: B/13981 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>உயரம்: 5' 4<br>தகைமை/தொழில்: BSc (Marketing) NGO<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ:G/13973 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 7 இல் செவ்வாய்<br>தகைமை/தொழில்: O/L ஆட்டோ (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்<br>தொ.இ: B/13982 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 47 1/2<br>உயரம்: 162 cm<br>தகைமை/தொழில்:B.com, Tutor, Mentor (contract)<br>எதிர்பார்ப்பு: படித்த அர வேலையுள்ளவர்.<br>தொ.இ: G/13978 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம் : கார்த்திகை 11 இல் சூரி செவ்<br>கி.பா: 24<br>உயரம்: 5' 2<br>தகைமை/தொழில்: A/L பாதுகாப்பு பொறுப்பதிகாரி (Pvt)<br>எதிர்பார்ப்பு : அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/13984 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 5' 4<br>தகைமை/தொழில்: MBBS (Doctor)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, உயர்பதவி. கணக்காளர்<br>தொ.இ:G/13983 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம் : 163 cm<br>தகைமை/ தொழில்: Diploma in Bulding Supervisor (Pvt)<br>எதிர்பார்ப்பு: படித்த தொழிலுள்ளவர். 1.2 வயது கூடியவர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: B/13985 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா: 5' 5<br>தகைமை/தொழில்: NDT (IT) ஆசிரியர் (அரச)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி. வங்கி. ஆசிரியர். அரச உத்தியோகம்.<br>தொ.இ:G/13989 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

முகநூல் தரிசனம் 209

## நாம் செய்யும் செயல் நமக்கே திரும்பி வரும்

விபத்தில் பலத்த காயமடைந்த ஒருவர் மிகவும் மோசமான நிலையில், மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மருத்துவமனையின் உரிமையாளரான மருத்துவர் நோயாளியைப் பார்த்தவுடன், அவர் உடனடியாக ஐசியூவிற்கு விரைந்து சென்றார்.2-3 மணிநேர அறுவை சிகிச்சைக்குப் பிறகு, மருத்துவர் வெளியே வந்து, "இவருக்கு இங்கு எந்த விதமான சிரமமோ, அசௌகரியமோ ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்...மேலும் , அந்த நபரிடம் சிகிச்சை மற்றும் மருந்துகளுக்கு பணம் எடுக்க வேண்டாம்" என்றும் தனது ஊழியர்களிடம் கூறிச்சென்றார்.

நோயாளி சுமார் 15-20 நாட்கள் மருத்துவமனையில் இருந்தார். அவர் நன்றாக குணமடைந்து மருத்துவ மனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட இருந்தபோது, மருத்துவர் (மருத்துவமனையின் உரிமையாளரும்) அவரது இறுதி அறிக்கையை பரிசீலனைக்கு பெற்றார்.

அதனுடன் அந்த நோயாளிக்கு சுமார் 5.50 லட்சம் ரூபாய் பற்றுசீட்டு வழங்கப்பட்டது. டாக்டர் அவருடைய அக்கவுண்ட் மேனேஜரை அழைத்து, "இவரிடம் ஒரு பைசா கூட வாங்க வேண்டாம். அந்த நோயாளியை என் மேசைக்கு அழைத்து வாருங்கள்" என்றார்.

நோயாளி சக்கர நாற்காலியில் மருத்துவர் அறைக்கு அழைத்து வரப்பட்டார். மருத்துவர் நோயாளியிடம், "தம்பி! என்னை அடையாளம் தெரிகிறதா?"

நோயாளி கூறினார், "நான் உங்களை எங்கேயோ பார்த்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். ஆனால் எங்கே என்று ஞாபகம் இல்லை..."டாக்டர் சொன்னார், "நாலு வருஷத்துக்கு முன்னாடி, சூரியன் மறையும் சமயத்துல ஊருக்கு அப்பால் அந்த காட்டில் ஒரு காரை சரி பண்ணினீங்க...இப்போது ஞாபகம் வருகிறதா?""ஆமா சார், நல்லா ஞாபகம் இருக்கு..."

"அன்றைய தினம் நான் எனது குடும்பத்துடன் சுற்றுலா சென்று கொண்டிருந்த போது, கார் பழுதாகி விட்டது. சுற்றிலும் வெறிச்சோடிய காடுதான் இருந்தது. நாங்கள் அனைவரும் ஏதாவது உதவி செய்ய கடவுளிடம் பிரார்த்தனை செய்தோம். சிறிது நேரத்தில் ஒரு அதிசயம் நடந்தது. நீங்கள் பைக்கில் வந்தீர்கள்... பைக்கை நிறுத்திவிட்டு எங்கள் பிரச்சனைக்கு காரணம் கேட்டீர்கள். பிறகு காரின் பானட்டைத் திறந்து சரிபார்த்தீர்கள்... சில நிமிடங்களில் கார் ஓடத் தொடங்கியது.

நீங்கள் ஒரு கராஜ் நடத்துகிறீர்கள் என்று சொன்னீர்கள்.


அத்தகைய கடினமான சூழ்நிலையில் உங்கள் உதவிக்கு விலை இல்லை. அது விலைமதிப்பற்றது.

ஆனாலும், நான் உங்களிடம், "எவ்வளவு பணம் வேண்டும்?" என்று கேட்டேன். அந்த நேரத்தில், நீங்கள் கூப்பிய கைகளுடன் பேசிய வார்த்தைகள், "எனது விதியும் கொள்கையும் என்ன வெனில்... பிரச்சனையில் இருப்பவரின் உதவிக்காக நான் எதையும் திரும்பப் பெறுவதில்லை. இந்த வேலையின் கணக்கை என் கடவுள் வைத்திருப்பார்." என்றீர்கள்.

அந்த வார்த்தைகள் என் வாழ்க்கைக்கு உத்வேகம் அளித்தன. "சாதாரண வருமானம் உள்ள ஒருவரால் இவ்வளவு உயர்ந்த எண்ணங்களும், மதிப்புகளும் இருக்க முடியும் என்றால்...., அவற்றை நாமும் பின்பற்றினால் என்ன?" என்று அன்று நினைத்தேன்.அன்றிலிருந்து, இன்று வரை அதை கடைப்பிடித்து வருகிறேன். இன்று, இந்த மருத்துவமனை என்னுடையது. நீங்கள் இங்கே என் விருந்தாளி. உங்கள் சொந்த விதியின் படி...என்னால் உங்களிடமிருந்து எதையும் வாங்க முடியாது. இது போன்ற சேவைகள் கடவுளின் அருளாகும். "நீங்கள் இப்போது சந்தோஷமாக வீட்டிற்குச் செல்லுங்கள், உங்களுக்கு எந்தப் பிரச்சினை வந்தாலும், நீங்கள் தயங்காமல் என்னிடம் வரலாம்." மருத்துவர் கூறிவிட்டு கேபினை விட்டு வெளியே சென்றார். அந்த நபர் அறையில் வைக்கப்பட்டிருந்த இறைவனின் படத்தைப் பார்த்ததும், அவன் கைகள் தானாக உயர்ந்து, தானாக இணைந்தன... அவன் கண்களில் கண்ணீர் பெருகியது. அவனது இதயம் அளவற்ற ஆனந்தத்தால் நிறைந்தது.இதுதான் பிரபஞ்ச விதி!

## இரண்டாம் உலகப்போரில் வீசப்பட்ட போர்க்கால வெடிகுண்டு

### அகற்றிய சிங்கப்பூர்



(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் அப்பா புக்கிட் தீமா ரோட்டில் வீசப்பட்ட 100 கிலோ கிராம் எடை கொண்ட வெடிகுண்'டு வெற்றிகரமாக அகற்றப்பட்டுள்ளது.

அப்பர் புக்கிட் தீமா ரோட்டில் போர்க்காலத்தின்போது வீசப் பட்டுப் புதையுண்ட வெடி குண்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை கண்டுபிடிக்கப்பட்டது. கட்டுமானத் தளத்தில் அது கண்டுபிடிக்கப்பட்டதாக பொலி ஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றது.

இரண்டாம் உலகப் போரில் விமானம் வழி வீசப்பட்ட வெடி குண்டின் எடை சுமார் 100 கிலோகிராம் இருக்கும் எனத் தெரிவித்தனர்.

வெடிகுண்டை நகர்த்துவது ஆபத்தான செயல் என்பதால் அது கட்டுமானத் தளத்தி லேயே தகர்க்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். சுற்றியுள்ள சாலைகள் மூட ப்படும் எனவும் வெடிகுண்டு தகர்க்கப்படும் போது அதிகச் சத்தம் கேட்கலாம். அதைக் கேட்டு அஞ்ச வேண்டாம் என்று பொது மக்களுக்கு அறி வுறுத்தப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் வெடி குண்டு வெற்றிகரமாக தகர்த் தப்பட்டது. இதனை சிங்கப்பூர்க் பொலிஸார் உறுதிசெய்து ள்ளனர். (நி-5)

## கனடாவி

## காலிஸ்த

(ஒட்டாவா)

டொராண்டோவில் காலி


பிரதமர் நரேந்திர மோடியி



## மணிப்பூரில் தொடரும் அமைதியின்மை

(டில்லி)

மணிப்பூரில் கடந்த ஜூலை மாதம் காணாமல் போயிருந்த இரண்டு சிறு வர்கள் கொலை செய்யப் பட்டமை தொடர்பான வழக்கு விசாரணையை விரை வுபடுத்துவதற்காக இந்திய மத்திய புலனாய்வு பிரிவினர் இன்று அங்கு செல்லவுள்ளதாக மாநில முதலமைச்சர் பிரேன் சிங் தெரிவித்துள்ளார்.



சந்தேகநபர்களை கைது செய்வதற்காக மத்திய அரசா ங்கத்துடன் இணைந்து தங் களது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரு வதாக அவர் தமது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டு ள்ளார்.

கொலை செய்யப்பட்ட குறித்த சிறுவர்களின் பட ங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள நிலையில் அங்கு மீண்டும் அமைதியின்மை ஏற்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் நேற்று காலை முதல் மணிப்பூரில் தொலைபேசியிலான இணைய வசதிகள் துண்டிக்கப்பட்டு ள்ளன.

அத்துடன் அங்குள்ள பாட சாலைகளுக்கு நாளை வெள் ளிக்கிழமை வரையில் விடு முறை வழங்கப்பட்டுள்ளது.

மணிப்பூரில் கடந்த மே மாத ஆரம்பத்தில் இரண்டு இன ங்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலை அடுத்து அங்கு நான்கு மாதங்களு க்கு தொலைத்தொடர்பு வசதிகள் இடைநிறுத்தப்பட்டு கடந்த 23 ஆம் திகதி மீள இணைக்கப்ப ட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## திடீரென தீப்பிடித்த எரிபொருள் ந
## 68 பேர் உடல் கருகிப் பலி, 300 பேர்



### அசர்பைஜானில் துயரம்

(பக்கூ)

அசர்பைஜானில் எரி பொருள் நிலையம் தீப்பி டித்து எரிந்ததில் 68 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளதுடன் 105 பேர் காணாமல்போன நிலை யில், 300 க்கும் அதிகமா னோர் படுகாயமடைந்து ள்ளனர்.

தென்மேற்கு ஆசிய நாடான அசர்பைஜானுக்கு சொந்தமான நாகோர்னோ - கராபாக் பகு தியில் இரா ணுவம் அதிரடியாக களமிற ங்கியது.

அப்போது இராணுவத் தினர் மேற்கொண்ட துப் பாக்கிப் பிரயோகத்தில் பிரிவினை வாதிகள் சரண் அடைந்தனர்.

இந்த பதற்றமான சூழ் நிலை காரணமாக அங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாவில் இந்தியக் கொடியை எரித்து

# ிஸ்தான் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்!

ல் காலிஸ்தான் ஆதரவாளர்கள் சிலர் இந்தியக் கொடியை எரித்ததுடன் மோடியின் படத்தை காலணிகளால் மிதித்துள்ளனர்.





ராய்ட்டர்ஸ் அறிக்கையின்படி, கனடாவில் மூன்று முக்கிய கனேடிய நகரங்களில் எதிர்ப்பாளர்கள் "காலிஸ்தான்" என்ற வார்த்தையுடன் மஞ்சள் கொடிகளை அசைத்து, பிரிவினைவாத முழக்கங்களை எழுப்பி இந்திய தேசிய கொடியை எரித்துள்ளனர்.

அதேசமயம் ஒட்டாவாவில் உள்ள இந்தியாவின் உயர் ஸ்தானிகராலயத்திற்கு வெளியே மூடப்பட்ட சாலைகள் மற்றும் டொராண்டோ மற்றும் வான்கூவரில் உள்ள தூதரக கட்டடங்கள் கடந்த திங்களன்று சுமார் 500 கனேடிய காலிஸ்தான் பிரிவினைவாத எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டங்களில் இடம்பெற்றிருந்தனர்.

அத்துடன் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டது தொடர்பாக இந்திய அரசுக்கு தங்கள் கண்டனத்தை அவர்கள் வெளிப்படையாக தெரிவித்திருந்தனர்.

காலிஸ்தான் தீவிரவாதி கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து கனடா - இந்தியா உறவில் விரிசல்களை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## 25 ஆவது பிறந்தநாளை கொண்டாடிய கூகுள் நிறுவனம்




(வோஷிங்டன்)

உலகின் மிக பிரபலமான தேடுபொறி நிறுவனமான கூகுள் நேற்று தனது 25 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடியது.

அதற்காக கூகுள் நிறுவனம், இந்த நாளை குறிக்க தனது முகப்பு பக்கத்தில் ஒரு டூடுலையும் உருவாக்கி உள்ளது.

செர்ஜி பிரின் மற்றும் லாரி பேஜ் என்ற இரு நண்பர்கள் இணைந்து உருவாக்கியதே கூகுள் என்ற தேடுபொறி நிறுவனம். ஆனால் தற்போதைய தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை ஆவார்.

தற்போதைய இணைய உலகில் தன்னிகரற்ற தேடுபொறியாக கூகுள் ஜொலித்து வருகின்றது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## மின்சார கார் உற்பத்தியை துரிதப்படுத்தவுள்ள நிசான்

முன்னணி கார் தயாரிப்பு நிறுவனமான நிசான், மின்சார கார் உற்பத்தியை துரிதப்படுத்த முடிவு செய்துள்ளது.

ஐரோப்பாவில் விற்கப்படும் அனைத்து நிசான் கார்களையும் 2030 ஆம் ஆண்டிற்குள் பிரத்தியேகமாக எலெக்ட்ரிக் கார்களாக மாற்ற நிறுவனம் இலக்கு வைத்துள்ளது.

இதேவேளை, 2030 ஆம் ஆண்டுக்கு பின்னர் டீசல் மற்றும் பெற்றோல் கார்களை விற்பனை செய்வதற்கு தடை விதிக்கும் பிரித்தானியாவின் தீர்மானம் 2035 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிசான் தலைவர் தனது முடிவு சரியானது என்று கூறுகிறார். இந்த தசாப்தத்தின் இறுதிக்குள் புதிய பேட்டரி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த நிசான் திட்டமிட்டுள்ளது. இதனால் எலக்ட்ரிக் கார்களின் விலை குறையும் என அந் நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-5)

## ஈராக் திருமண நிகழ்வில் திடீர் தீ விபத்து

- 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு
- 150 பேர் படுகாயம்



(பக்தாத்)

வடக்கு ஈராக்கில் திருமண நிகழ்வொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 100 பேர் உயிரிழந்துள்ள அதேநேரம் 150 பேர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கின் வடக்கு நினிவே மாகாணத்தில் உள்ள அல்-ஹம்தானியாவில் நூற்றுக்கணக்கான மக்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் அந்நாட்டு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

திருமண நிகழ்வின் போது பயன்படுத்தப்பட்டவான வேடிக்கைகள் தீ விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக ஈராக்கின் பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)

## மை



மே மாத
6 இன
ஏற்பட்ட
அங்கு
க்கு
சதிகள்
ந்த 23
னக்கப
. (நி-5)

## ள் நிலையம்

## பேர் படுகாயம்

## ம்

ந்தமான
ாக் பகு
ரடியாக
ணுவத்
பாக்கிப்
வினை
ந்தனர்.
ன சூழ்
அங்கி

ருந்தவர்கள் அர்மீனியா வுக்கு தப்பி செல்ல முய ன்றனர்.

இதனால் அசர்பைஜா னின் ஸ்டெபனகெர்ட்டில் உள்ள எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக ஏராளமான கார்கள் அணிவகுத்து நின்றன.

அப்போது அந்த எரிபொருள் நிலையம் திடீரென தீப்பிடித்து எரிந்து பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதில் பல கார்கள் தூக்கி வீசப்பட்டன. மேலும், இந்த தீ விரைவில் அருகில் உள்ள ஏனைய பகுதிகளுக்கும் வேகமாக பரவியது.

இந்த தீ விபத்தில் 68 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். 300 க்கும் மேற்பட்டோர் படுகாயமடை ந்தனர். மீட்பு படையினர் அவர்களை மீட்டு சிகிச்சை க்காக வைத்தியசாலையில் அனுமதித்தனர். அதில் பலரது நிலைமை கவலைக் கிடமாக இருப்பதால் உயிரி ழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அடியவர்கள் புடைசூழ தேரேறி வலம் வரும் வல்லிபுர ஆழ்வார்

இலங்கையில் வரலாற்று பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயங்களில் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவிலும் ஒன்றாகும். பருத்தித்துறையில் இருந்து கிட்டத்தட்ட 4 மைல் தொலைவில் அமையப் பெற்றுள்ள இக் கோவிலானது மூர்த்தி. தலம். தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப் பெற்ற புராதன தலமாகும். இவ் வாலயத்தின் மூல மூர்த்தியாக விஷ்ணுவின் சுதர்சனச் சக்கரம் உள்ளது.

பருத்தித்துறை. புலோலியில் "வராத்துப் பழை" என்கின்ற சிறிய கிராமம் உண்டு. இக்கிராமத்தில் கண்ணனையே அனுதினம் பூஜித்து வந்தார் வல்லிநாச்சியார். இவருக்கு குழந்தைச் செல்வம் இன்மையால் ஸ்ரீ நாரயண மூர்த்தியிடம் தமது குறையை நீங்க வேண்டுமென அழுது வேண்டினார். கேட்டவர்க்கு வரம்தரும் வள்ளல் மாயவன், அவர் கனவில் தோன்றி "நீ, உடனே கற்கோவளம் கடற்கரைக்கு வா" எனக்கூறி அருள, அம்மையாரும் அவ்வண்ணம் அங்கே சென்றார்.

என்னே! ஆச்சரியம், கடலில் அலை நடுவே மச்ச உருவில் (மீன்) துள்ளி விளையாடிய கண்ணன், பின்னர் குழந்தையாகி, அம்மையாரின் மடியில் விழுந்து தவழ்ந்து நின்றார். சுற்றி நின்ற மக்கள் பரவச நிலை எய்தினர். அப்போதுதான் ஒரு புதுமை நிகழ்ந்தது. கண்ணன் திடீரென ஸ்ரீ சக்கர வடிவம் கொண்டான்.

பின்னர் அனைவருமே வல்லி நாச்சியாரின் கருத்திற்கேற்பஸ்ரீ சக்கரத்தைப் பல்லக்கில் ஏற்றி ஊருக்குக் கொண்டு செல்லலாயினர். வழியில் தாகசாந்திக்கு என அடியார்கள் பல்லக்கை இறக்கி நீர் அருந்தி முடிந்ததும், மீண்டும் பல்லக்கைத் தூக்க முயற்சி செய்தனர். ஆனால் முடியவில்லை. ஸ்ரீ சக்கரம் அங்கேயே நிலையாய் இருந்து விட்டது. அந்த இடமே தற்போது கோயில் கொண்ட ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருக் கோவிலும் ஆகும்.



இன்று காண்போர் வியக்கும் வண்ணம் மிகப்பெரிய இராஜகோபுரம். மூன்று பெரும் வீதிகளுடனும். மூர்த்தி, தலம், தீர்த்தம் கொண்ட சிறப்பினை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் கொண்டுள்ளமை சிறப்புக் குரியது.

மேலும் வல்லிபுர ஆழ்வார் தோன்றி காட்சி கொடுத்தமையினால் கோவில் அருகே சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தே உள்ள சமுத்திரத்தில் தான் சமுத்திர தீர்த்தோற்சவம் வெகு சிறப்பாக நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அன்றைய தினம் திரளும் பக்தர்கள் தொகை, வேறெங்கும் காணாத வியக்க வைக்கும் காட்சியேயாகும்.

இக்கோவில் மூலஸ்தானத்தில் சக்கரமே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. கோவிலின் பரிவார மூர்த்திகளாக விநாயகப் பெருமான், நாகதம்பிரான், நாச்சிமார் ஆகியோர் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றனர். புரட்டாதி மாதம் பூரணைத் திதியில் தீர்த்த உற்சவம் நிகழக் கூடிய வகையில் 15 நாட்கள் திருவிழா நடைபெறும் 15 ஆம் நாள் தேர்த்திருவிழாவும் 16 ஆம் நாள் கப்பல் திருவிழாவும் இடம்பெறும். அடுத்த நாள் பட்டுத் தீர்த்தம் இடம்பெறும். இங்கு நடைபெறும் சமுத்திர திருவிழாவான (கப்பல் திருவிழாவை) காண்பதற்கு பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் ஒன்று கூடுவது விசேடமாகும்.

இக்கோவிலில் ஆவணி மாதம் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்படும். நாராயணனின் நரகாசுர சம்காரம் தீபாவளி தினத்தன்றும், மார்கழி மாதம் முழுவதும் காலையில் விசேட பூசைகள் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமையே வல்லிபுர ஆழ்வாருக்கு சிறப்பான நாளாகும். இவ்வாறு இறைவன் ஒருவனே என்ற கருத்தின் அடி நாதத்தை வெளிப்படுத்தும் வகையில் சிவனும் திருமாலும் ஒருவரே என்ற உண்மையை வெளிப்படுத்தும் திருத்தலமாக இக்கோவில் விளங்குகிறது. இங்கு விபூதியும் திருநாமமும் பிரசாதமாக வழங்கப்படுவது இக் கோவிலின் தனிச்சிறப்பாகும். இன்று தேரேறி வீதி வலம் வரும் வல்லிபுர ஆழ்வாரின் தேர்த்திருவிழாவில் தேரின் வடத்தை பிடித்து விஷ்ணுவின் அருளைப் பெற்றிடுவோம்.



## வாருங்கள் தேரிழுப்போம்


நாடிவந்து மூலமூர்த்தி முகம் பார்த்து
நெற்றியிலே நீறணிந்து பொட்டிட்டு
வாடியே உளமுருகி நாற்றிசையும்
வலம்வந்து சூடமேற்றி தொழுதோமே
கோடிபெறும் கோபுர கலையழகு
காண்பவரின் கண்களுக்கு பேரழகு
ஓடிவந்து தேரூர வடம்பிடித்தோம்
ஊர்செழிக்க அருள்வாயே ஆழ்வாரே

"கலாபூசணம்"
கே.ஆர்.திருத்துவராஜா

## தேரேறி வருவாய் கண்ணா!

அலைபாயும் மனத்தொடு ஆர்வமுடன் நாடும்
அடியவர்களுக்கு அருள் புரியும் அரிராமா!
சிலையாக நீ நின்றாலும் எங்களுக்கு
நின் அடியே தஞ்சம் ஐயா போற்றி போற்றி
அல்லும் பகலுமுனை மனதார வாழ்த்தி
உன் அடி பணிந்து கைகூப்பி வணங்குகின்றோம்
சொல்லுமுன் நாமத்தால் கல்லும் கரைந்துருகும்
வெல்லும் வழிகாட்டி வாழ்விப்பார் கோவே
மலையைத் தாங்கி நிலையாக நின்று
மக்கள் துயர் தீர்த்த மாதவா
வல்லவனின் அருளால் வையத்தில் புதுமை
விளைந்திடத் தேரேறி வருவாய்

"கலாபூசணம்"
மு.தணிகாசலம், கற்கோவளம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி திருவள்ளுவர் வித்தியாலய இயங்கு நிலையை உறுதிப்படுத்துங்கள்

## சிறீதரன் எம்.பி கோரிக்கை

(தருமபுரம்)

கிளிநொச்சி திருவள்ளுவர் வித்தியாலயத்தின் இயங்கு நிலையை உறுதிப்படுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மலையாளபுரம் கிராம மக்களின் கோரிக்கைக்கு அமைவாக, பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் அப்பகுதி மக்களுடனான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது தாம் எதிர்கொள்ளும் அடிப்படை இடர்பாடுகள் தொடர்பிலும் இக்கிராமத்தில் இயங்கும் ஆரம்பப் பாடசாலையான திருவள்ளுவர் வித்தியாலயத்தை நிரந்தரமாக மூடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சிறீதரனிடம் சுட்டிக் காட்டியிருந்தனர்.

குறித்த பாடசாலையை நேரில் சென்று பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர், பாடசாலை அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக மாணவர்களுக்கான குடிநீர்க்கிணறு ஒன்றை புதிதாக அமைப்பதற்குரிய ஏற்பாடுகளை புலம்பெயர் நன்கொடையாளர் ஒருவரின் நிதியுதவியோடு உடனடியாகவே மேற்கொண்டிருந்தார்.

பாடசாலையின் இயங்கு நிலையை உறுதிப்படுத்துமாறு, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு, பாராளுமன்ற கோரிக்கைக் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மலையாளபுரம் கிராமத்தையும் அதன் சுற்றயல் பகுதிகளையும் சேர்ந்த நூற்றுக் கணக்கான மாணவர்கள், இப்பாடசாலையைத் தாண்டி 2 1/2 கிலோமீற்றர் இற்கும் அதிக தூரத்திலுள்ள ஏனைய பாடசாலைகளுக்குச் செல்கிறார்கள். குடிநீர் வசதியின்மை, பாடசாலை வளாகத்தை எல்லைப்படுத்துவதற்கோ அல்லது பாடசாலையின் பௌதீக வளங்களை முறையாகப் பேணுவதற்கோ உரியவகையில் சுற்றுவேலி அமைக்கப்படாமை, மற்றும் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றன.

மேற்குறித்த விடயங்களின் அடிப்படையில், முறையான கல்வி மூலம் அடுத்த தலைமுறையைக் கட்டமைக்க வேண்டிய கட்டாயத் தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு, கிளி/திருவள்ளுவர் வித்தியாலயத்தின் இயங்கு நிலையை உறுதிப்படுத்தித் தருமாறு குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6-316)

# வேட்டைத் திருவிழாவின் போது யானையில் வீதி வலம் வந்த பிள்ளையார்



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு உலகளந்த பிள்ளையார் ஆலய வேட்டை திருவிழாவில் விநாயகர் யானையில் ஊர் சுற்றி வந்துள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள உலகளந்த பிள்ளையார் ஆலய திருவிழாவின் சிறப்பு வாய்ந்த 7 ஆம் திருவிழாவான வேட்டைத்திருவிழா நேற்று முன்தினம் மிகவும் சிறப்புற இடம் பெற்றது.

யானையில் பிள்ளையார் துர்க்கா வீதி வழியாக வலம் வந்து உலகளந்த பிள்ளையார் ஆலயத்தை சென்றடைந்தது. இந்த வேட்டை திருவிழாவில் வேடுவர் வேடம் தரித்து அடியவர்கள் தமது நேர்த்தி கடன்களை நிறைவேற்றினர். எந்தவொரு ஆலயங்களிலும் இடம்பெறாத வகையில் இங்கே வேட்டைத் திருவிழா யானையில் சுவாமி வலம் வந்து சிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (5-6-299)

# கத்திக்குத்துக்கு இலக்கான நபருக்கு நட்டஈடு வழங்க தீர்ப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இராமநாதபுரம் அழகாபுரி பகுதியில் நபர் ஒருவரை கத்தியால் குத்தி கடுங்காயம் விளைவித்த குற்றவாளிக்கு பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 24 மாத கால கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் பாதிக் கப்பட்ட நபருக்கு இரண்டு இல ட்சம் ரூபா நட்டஈடு செலுத்து மாறும் கிளிநொச்சி மேல் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.


கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அழகாபுரி பகுதியில் கடந்த 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி நபர் ஒருவரை கத்தியால் குத்தி கடுங்காயத்தினை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கிளிநொச்சி மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்றின் நீதிபதி ஏ.எம்.ஏ சகாப்தீன் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது கடுங்காயம் ஏற்படுத்தியமைக்காக பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 24 மாத கால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் 12 மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். அதே நேரம் பாதிக்கப்பட்டவருக்கு இரண்டு இலட்சம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (5-6-315)

# இனந்தெரியாத நபர்களால் வீட்டின் மீது பெற்றோல் குண்டுவீச்சு

## பொலிஸில் முறைப்பாடு செய்த நபர்மீதும் தாக்குதல்



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருவையாறு மூன்றாம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்களால் பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளதுடன் வீட்டின் நுழைவாயில் மற்றும் கதவுகள், மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் அழித்து சேதமாக்கியுள்ளனர்.

சேதமாக்கப்பட்ட மோட்டார் சைக்கிளையும் களவாடி சென்றுள்ளனர். நேற்று முன்தினம் இரவே குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் பிரிவில் நேற்று முறைப்பாடு செய்துவிட்டு வரும் வழியில் குறித்த நபர் மீது இனந்தெரியாத நபர்களால் வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-6-316)

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் வழிநடத்தலில் மணியம்தோட்டம் ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் கீழ் இயங்கும் "இணைந்த கரங்கள்" நடத்தும் "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்" என்னும் மாபெரும் கண்காட்சி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை மணியம்தோட்டம் இரண்டாம் குறுக்குத் தெருவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் யாழ்ப் பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்கள், இலங்கையின் சர்வமத இனமக்களும் அவர்களின் உணவுப் பழக்கங்களும், எதிர்கால சமூகம் மறந்து போகும் பழைய காலத்துப் பாவனைப் பொருட்கள் உட்பட பல்வேறு வகையான சிறப்பம்சங்கள் இடம்பெறுகின்றன.

இவற்றுடன் மணியந்தோட்ட மண்ணில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனைக்கூடம், மகிழ்வூட்டும் விளையாட்டுக்கள் என்பனவும் இடம் பெறவுள்ளன. (5-6)

# நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருச்செல்வம் நவரத்தினம் எழுதிய வீரமும் விவேகமும் சிறுவர் கதைகளின் நூல் வெளியீடு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி.ந.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறும். (5-6)

# மகாசமாதி பூசை

(யாழ்ப்பாணம்)

சிவஸ்ரீ சுவாமி அம்மா-செல்வி மலர் பொன்னம்பலத்தின் 13 ஆவது குருபூசை தினம் இன்று காலை 9 மணியளவில் உடுவில் கிழக்கு -கடவுள் சந்நிதியில் பூசைகளும் ஆராதனைகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (5-6)

# குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 44 ஆவது மகாசமாதிக் குருபூசை தினம் நாளை வெள்ளிக்கிழமை மறவன்புலோவிலுள்ள சுவாமிகளின் சமாதி நிலையத்தில் காலை 9 மணியளவில் கொண்டாடப்படும்.

அன்றைய தினம் பூசைகளும் ஆராதனைகளும் சொற்பொழிவுகளும் இடம் பெறும். (5-6)

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளாலும் வவுனியாவில் திலீபனுக்கு அஞ்சலி



(குருமன்காடு)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் தியாக தீபம் திலீபனுக்கு வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது திலீபனின் திருவுருவப்படத் திற்கு உறவுகளால் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (5-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

294





சில சமயம் காடுகளுக்கு வெளியிலும் யானைக் கூட்டம் வந்துவிடும்.

"இலங்கையில் உள்ளவர்கள் காட்டுமிராண்டி மக்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அது முழுப் பொய்."

"அப்படியானால் சரி. நீ சொன்னால் உண்மையாகத் தானிருக்கும். அப்படிப்பட்ட காட்டுப் பிரதேசத்தில் இளவரசர் அருள்மொழிவர்மர் எங்கே இருக்கிறார் என்று தேடிக்கண்டு பிடிக்க வேண்டும்."

"அது ஒன்றும் கஷ்டமில்லையென்று சற்று முன் சொன்னாயே?"

"ஆமாம் சொன்னேன். சூரியன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதில் என்ன கஷ்டம் இருக்க முடியுமென்று முதலில் நினைத்தேன்."

"இப்போது ஏன் வேறு விதமாக நினைக்கிறாய்?"

"சூரியனை மேகங்கள் மறைத்திருக்கலாம் அல்லது கடலுக்கடியில் சென்றிருக்கலாம்."

"இந்தச் சூரியனை எந்த மேகமும் கடலும் மறைத்து விட முடியாது. பொன்னியின் செல்வரை மறைக்க முயலும் மேகமும் ஒளி பெறும் கடலும் ஜொலிக்கும்"

இளவரசரைப் பற்றிப் பேசும் போது இவளுடைய உற்சாகம் எப்படிப் பொங்குகிறது? சோழநாட்டுப் பிரஜைகள் பலரையும் போல இந்தப் பெண்ணும் அவரைத் தெய்வமாகக் கருதுகிறாள். அருள்மொழிவர்மரிடம் அப்படிப்பட்ட வசீகர சக்தி என்ன இருக்கும்?. இவ்விதம் மனத்தில் எண்ணிக்கொண்டு, "அப்படியானால் இலங்கையில் இளவரசரைத் கண்டுபிடிப்பது கஷ்டமில்லையென்றா சொல்கிறாய்?" என்றான்.

"சோழ சைன்யம் எங்கே இருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு போனால், இளவரசர் இருக்கும் இடம் தானே தெரிகிறது."

"அது எப்படி? இலங்கையில் பாதி அளவு சோழ சைன்யம் பரவி இருக்கிறது என்று கேள்விப்பட்டேனே?"

"ஆமாம் மாதோட்டத்திலிருந்து புலஸ்திய நகரம் வரையில் சோழர் படை பரவியிருக்கிறது என்றுதான் நானும் கேள்விப்பட்டேன்"

"பின்னே? அவ்வளவு பெரிய பிரதேசத்தில் இளவரசர் எங்கே இருக்கிறாரோ? காட்டு வழிகளில் தேடிச்சென்று அவரைக் கண்டுபிடிக்க அதிக நாள் ஆகலாம். இந்த ஓலையை உடனே அவரிடம் நான் சேர்ப்பித்தாக வேண்டும். நீ தான் ஓலையைப் பார்த்துவிட்டாயே? எவ்வளவு அவசரம் என்று உனக்குத் தெரிந்திருக்குமே?"

சமுத்திரகுமாரி இதற்கு மறுமொழி எதுவும் சொல்லாமல் மௌனமாயிருந்தாள்.

"இளவரசர் இருக்குமிடம் நிச்சயமாகத் தெரிந்தால் வீண் அலைச்சல் அலையாமல் அவர் இருக்குமிடத்துக்கு நேரே போய்விடலாம்" என்றான் வந்தியத்தேவன்.

"அதற்கு ஒரு வழி இருக்கிறது" என்றாள் பூங்குழலி.

"இருக்கும் என்று நம்பித்தான் உன்னைக் கேட்டேன்."

"காலையில் நாகதீவில் உன்னை இறக்கி விடுவதாகச் சொன்னேன் அல்லவா?"

"ஆமாம்"

"நாகதீவுக்குப் பக்கத்தில் பூதத்தீவு என்று ஒன்றிருக்கிறது."

"தீவின் பெயரே கேட்கப் பயங்கரமாயிருக்கிறதே"

"பயப்படாதே! ஆதியில் அந்தத் தீவின் பெயர் போதத் தீவு. புத்த பகவான் ஆகாச மார்க்கமாக இலங்கைக்கு வந்த போது முதன் முதலில் அந்தத் தீவிலேதான் இறங்கினாராம். அங்கிருந்த அரச மரத்தினடியில் வீற்றிருந்து புத்த தர்மத்தைப் போதித்தாராம். அதனால் போதத் தீவு என்று பெயர் வந்தது."

"பின்னால் அது 'பூதத் தீவு' என்று ஆகிவிட்டதாக்கும்."

"ஆமாம்! 'பூதத்தீவு' என்ற பெயரைக் கேட்டே உன்னைப்போல் பலர் பயங்கரமடைந்தார்கள். பிறகு அந்தத் தீவுக்குச் சாதாரணமாக யாரும் போவதில்லை. பூதத்துக்குப் பயப்படாதவர்கள்தான் போவார்கள்."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## எங்க ஏரியா உள்ள வராதே

வெயில் காலம் வந்ததுனால காட்டுல இருந்த நதி சுத்தமா வற்றி போச்சு. காட்டுல நிறைய மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அதுல ஒரு பெரிய யானைக் கூட்டம் இருந்துச்சு. அந்தக் கூட்டத்தை யானை ராஜா தான் பத்திரமா பார்த்து கிட்டு இருந்தாரு.



அப் போது தண்ணீர் இல்லாம மற்ற விலங்குகள் இறந்து போகிறதை பார்த்து தன் கூட்டத்தை நினைத்து பயந்து போனார் யானை ராஜா. ராஜாவுக்கு தெரியும் அவர் இந்த பிரச்சினைக்கு தீர்வு கண்டுபிடிக்கணும்னு இல்லனா ஒவ்வொரு யானையாக இறந்து போய் விடும்.

ஒரு நல்ல தீர்வை காண எல்லா யானைகளையும் ஒன்று கூட்டினார். "தண்ணீர் உள்ள ஒரு இடத்து க்கு நாம் போகவில்லை என்றால் நம்முடைய வாழ்க்கை ரொம்ப மோசமாக போக நிறைய வாய்ப்புகள் இருக்கு" என்று ராஜா யானை சொன்னது.

"தண்ணியா! எனக்கு ஒரு இடம் தெரியும். ஆனா அங்க போகணும்னா ரொம்ப தூரம் போகணும். நாம எல்லாரும் அங்க போய் டலாம்னு" சொல்லுச்சு இன்னொரு யானை. அதுக்கு மற்ற யானைகள் ஒத்துக்கிட்டாங்க. பயணத்தை ஆரம்பிச்சாங்க.

ரொம்ப தூரம் நடந்ததுக்கு அப்பறம் தாகமா இருந்த யானைகள் தூரத்தில் ஒரு நதியை பார்த்த தும் அதை நோக்கி ஓடின. அவங்க அப்படி ஓடிப் போகும் வழியில் தங்கியிருந்த ஒரு சுண்டெலி கூட்டத்தின் வீடு சுத்தமா அழிஞ்சு போச்சு. எல்லா எலிகளும் "நம்ம வீட்டுக்கு என்ன ஆச்சுன்னு" கலந்து பேசினாங்க.

யானைகள் புகுந்தது அறிந்து நம்ம எல்லாரும் யானை கிட்ட போய் நம்ம வாழும் இந்த வழியை விட்டுட்டு வேற வழியா நதிக்கு போக சொல்லி கெஞ்சலாம் என்று எலி கூட்டம் முடிவு எடுத்தாங்க. எல்லா எலிகளும் யானை கூட்டத்துக்கு முன்னாடி நின்னு யானை ராஜா கிட்ட கனிவா முறையிட்டாங்க. "என் ராஜாவே! நாங்க இந்த நதி பக்கத்துல ரொம்ப வருசமா வாழ்ந்துக்கிட்டு இருக்கோம். உங்க யானைகள் இந்த வழியா தண்ணீர் குடிக்க போகும் போது நாங்க தங்கியிருக்கும் இடம் சுத்தமாக அழிந்து போகிறது. இப்போவே நாங்க பாதி இடத்தை இழந்து விட்டோம். தயவு செய்து எங்களுக்கு உதவி செய்யுங்கள்.

உங்க யானைகளை வேற வழியில் போக சொல் லுங்க" என்று கெஞ்சி னாங்க. ராஜா யானையோ, "சரி நான் எங்க கூட்டத்துக் கிட்ட பேச றேன்னு" சொன்னாங்க.

அதே போல தன் கூட்டத்திடம், "யானைகளே நம்ம தண்ணீர் குடிக்க போகிற வழியில ஒரு சுண்டெலி கூட்டம் இருக்கு. நாம ஓடி வரும்போது அந்த இடத்தை சேதப்படுத்திட்டோம். இப்போ இருந்து அவங்க வழியில போகாம வேற வழியில தான் போகணும்" என்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வேளாண் செய்கையை ஊக்கப்படுத்துங்கள்

பெரும்போக நெற் செய்கைக்கான ஆயத்தங்கள் தொடங்கியுள்ளன.

கமத்தொழில் திணைக்களங்கள் இலவசமாக உரங்களை வழங்குகின்ற பணிகளை முன்கூட்டியே ஆரம்பித்துள்ளமை பாராட்டுக்குரியது.

கடந்த காலங்களில் நெல் விதைத்து உரப்பசளை இடவேண்டிய நேரத்தில் உரம் கிடைக்காமல் விவசாயிகள் அந்தரப்படுகின்ற நிலைமை இருந்தது.

எனினும் இந்த ஆண்டில் பெரும்போக நெற்செய்கைக்கான உரத்தை முன்கூட்டியே கமத்தொழில் சேவை நிலையங்கள் வழங்கி வருகின்றன.

இது விடயத்தில் ஒவ்வொரு கமக்காரர் அமைப்புகளும் கருசனையோடு செயற்படுவதன் காரணமாக இலவச உரம் வழங்குகின்ற பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

இதுதவிர, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி என்பது ஏழை மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

அதிலும் பஞ்சம் பசி என்றளவில் அந்தப் பாதிப்பு மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக சிறுவர்கள் மற்றும் பெண்களிடையே மந்த போசாக்கு அதிகரித்துள்ளதை புள்ளிவிபரங்கள் சுட்டி நிற்கின்றன.

இந்நிலையில் அனைவரும் நெல் விதைத்து தமது சீவனோபாயத்துக்குத் தேவையான அரிசியை உற்பத்தி செய்ய வேண்டும்.

அப்போதுதான் வறுமை நிலை முற்றாக ஒழிக்கப்படும்.

எனினும் நெற்செய்கையில் ஈடுபடுகின்றவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது மிகக் குறைந்தளவிலானவர்களே வேளாண் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

அதேநேரம் கணிசமான வயல்கள் நெல் விதைக்கப்படாமல் வீணே கிடக்கின்றன.

அதிலும் வசதி படைத்தவர்கள் மற்றும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்பவர்களின் வயல்கள் விதைக்கப்படாமல் இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இது ஒருபுறமிருக்க, வெறுமதியான வயல் பரப்புகள் புறம்போக்கு நிலங்களாகக் கிடப்பது தான் வேதனைக்குரியது.

ஆம், தனியாருக்கும் அரசுக்கும் சொந்தமான ஏகப்பட்ட வயல் நிலங்கள் நெற் செய்கைக்கு உட்படுத்தப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

கடல் நீர் உட்புகுந்ததன் காரணமாக ஏற்பட்ட உவர்த்தன்மை மற்றும் நிலத்தின் பதிவு காரணமாக அளவுக்கதிகமான வெள்ளம் தேங்கிக் கிடக்கின்ற நிலைமை மற்றும் கட்டாக்காலி கால்நடைகளால் ஏற்படக்கூடிய அழிவு என்பன காரணமாக ஏகப்பட்ட வயல் நிலங்கள் நெல் விதைக்கப்படாமல் வீணே கிடப்பதை அவதானிக்க முடிகின்றது.

எனவே உவர்த்தன்மை, அதிக வெள்ள நீர் தேங்கி நிற்றல், கால்நடைகளின் தொந்தரவு என்ற காரணங்களைக் காட்டி விளைச்சல் தரக்கூடிய வயல் நிலங்கள் வேளாண்மை செய்யப்படாமல் இருப்பது அபத்தமானது.

ஆகையால் இம்முறை நம் தாயகத்தில் இருக்கக்கூடிய அத்தனை வயல் நிலங்களும் நெற்செய்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அதனைக் கமக்காரர் அமைப்புகள் ஊக்குவிக்க வேண்டும்.

இதற்கும் மேலாக, நெற் செய்கைக்கு உட்படுத்தப்படாத வயல் நிலங்கள் தொடர்பில் உரிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு எதிர்வரும் காலங்களில் அதற்கும் உரிய தீர்வு காணப்படுவது அவசியம்.

அப்போதுதான் எங்களுக்கான அரிசியை நாங்களே உற்பத்தி செய்து எங்களளவில் தன்னிறைவை எட்ட முடியும்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த கடந்த 20 வருடகாலமாக முயற்சித்து வருகின்ற போதிலும் அதனை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லையென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று புதன்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத் தலைவரான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை பாதிக்கும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு கடற்றொழில் சமாசப் பிரதிநிதிகளினால் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த, கடந்த 20 வருட காலமாக தன்னால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எனினும் குறித்த அத்துமீறலை கட்டுப்படுத்துவதற்காக பல பேச்சுவார்த்தைகளை கச்சதீவு பகுதியில் ஏற்பாடு செய்திருந்தாகவும், எனினும் நான் கலந்து கொண்டேன். ஆனால் எந்தவிதமான முடிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது ஒரு தீர்மானத்துக்கு வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அதாவது, சக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா சென்று இந்த விடயம் தொடர்பில் தமிழக தலைவர்களுடன் கலந்துரையாடி உண்மையான நிலைமையினை அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் எனவும் அதற்கு-சக தமிழ் உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்கள் என நம்புவதாகவும் தெரிவித்தார். (ம-7)

## கடையிற்சுவாமிகளின் 132 ஆவது குருபூசை இன்று

(மண்டைதீவு)

மண்டைதீவில் வாழ்ந்த ஈழத்துச் சித்தர் பரம்பரையின் தலைமைக் குருவாகிய தவத்திரு கடையிற்சுவாமிகளின் 132 ஆவது குரு பூசை இன்று மண்டைதீவிலுள்ள அவரது நினைவாலயத்தில் இடம்பெறும். இன்று முற்பகல் 11 மணியளவில் சுவாமிகளுக்கு அபிஷேக ஆராதனை இடம்பெற்று தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும். (ம)

## இரதோற்சவம்

வரலாற்று சிறப்புமிகு நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய மகோற்சவந்தனில் இன்று 10 ஆம் நாள் இரதோற்சவம் இடம்பெறவுள்ளது.

காலை 6.30 மணியளவில் விசேட வசந்த மண்டபபூசைகள் இடம்பெற்று காலை 10.00 மணியளவில் விநாயகப்பெருமான் பஞ்சமுக விநாயகராக சித்திரத்தேரில் எழுந்தருளவுள்ளார்.

தொடர்ந்து பி.ப 1.00 மணியளவில் பச்சை சாற்றலும் ரத அவரோகணமும் இடம்பெறவுள்ளது. (ம-7)

### யாழ்.மாநகர சபையின்

## தீயணைப்பு சேவைகள் தற்காலிகமாக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர தீயணைப்புச் சேவையில் ஈடுபடும் தீயணைப்பு வாகனத்தின் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளமையினால் இன்று முதல் மறு அறிவித்தல் வரும் வரை யாழ். மாநகர சபையின் தீய ணைப்புச் சேவையானது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (ம-7)

## சுன்னாகத்தில் பட்டப்பகலில் 13 பவுண் நகை திருட்டு

பாடசாலையில் பிள்ளையை ஏற்ற சென்ற சமயத்தை பயன்படுத்தி வீட்டினுள் நுழைந்த திருடர்கள் 13 பவுண் நகை மற்றும் ஒரு தொகை வெளிநாட்டு நாணயங்கள் என்பவற்றை திருடி சென்றுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் வசிப்பவர், நேற்று முன்தினம் மதியம் பாடசாலையில் இருந்து பிள்ளைகளை அழைத்து வர சென்ற சமயம், வீட்டினுள் நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்த 13 பவுண் தங்க நகைகளையும், ஒரு தொகை வெளிநாட்டு காசுகளையும் திருடி சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,33)

### களுத்துறை மேல் நீதிமன்றால்

## கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய எண்மருக்கு மரணதண்டனை

கடந்த 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி ஒருவரை கூரிய ஆயுதத்தினால் வெட்டிக்கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களாக பெயரிடப்பட்டிருந்த 8 பேரும் குற்றவாளிகள் எனக்கூறி நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன இந்த தண்டனையை அறிவித்துள்ளார்.

களுத்துறை தெற்கு கலீல் பிளேஸ் பகுதியை சேர்ந்த ஒருவரே 2003 ஆம் ஆண்டு வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலை சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபர் 8 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

கொலை சம்பவம் தொடர்பான நீண்ட வழக்கு விசாரணைகளின் பின்னர் நேற்று தீர்ப்பை அறிவித்துள்ள நீதிபதி குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (ம-7)

## வாகன விபத்தில் ஒருவர் மரணம்

(கொழும்பு)

அலவ்வ வலகும்புர பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காரும் டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த காரில் பயணித்த இரண்டு பெண்கள் மற்றும் இரண்டு குழந்தைகள் பொல்கஹவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அலவ்வ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## நூலகவியல்சார் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நூலகவியல் சார் தொழிற்துறையினர் மற்றும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் - 29.09.2023 வட மாகாணத்திலுள்ள நூலகங்கள், தகவல் வள நிலையங்கள், உயர்கல்வி நிறுவனங்களில் கடமையாற்றும் பொது நூலகர்கள், ஆசிரிய நூலகர்கள், நூலகத்தொழிற்துறையினர் மற்றும் நூலகவியல் துறையில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக சமூக விரிவாக்கல் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நாளை வெள்ளிக்கிழமை (29.09.2023) காலை 10.30-12.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் நூலகவியல் சார் தொழிற்துறையினர் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், கல்வி வாய்ப்புக்கள், வேலை வாய்ப்புக்கள், தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளார்களினால் கோரப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா-இந்தியா உறவில் விரிசல் பின்னணி பற்றி ஒரு தொகுப்பு



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

02

அங்கிருந்தபடியே காலிஸ்தான் தனிநாடு கோரிக்கை தொடர்பான வேலைகளை முடுக்கி விட்டு வந்தார். 2016 ஆம் ஆண்டு இவருக்கு எதிராக இன்டர்போல் ரெட் கார்னர் நோட்டீஸ் வழங்கப்பட்டது. 2020 செப்டெம்பரில் பயங்கரவாதி என்று இந்திய அரசால் முத்திரை குத்தப்பட்டார்.

இந்த சூழலில் இந்தியாவில் தேடப்பட்டு வந்த ஹர்தீப் சிங் நிஜ்ஜார், கடந்த ஜூன் 18 ஆம் திகதி அன்று கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள சர்ரே நகரில் உள்ள குருத்வாராவின் வாகன நிறுத்துமிடத்திற்கு வெளியே மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.இவருக்கு வயது 45. இந்த கொலை சம்பவம் தொடர்பாக கனடாவை சேர்ந்த புலனாய்வு ஏஜென்சிகள் விசாரணை நடத்தி வந்தன. இந்நிலையில் நிஜ்ஜார் கொலை விவகாரத்தில் இந்திய அரசின் ஏஜெண்ட்களுக்கு தொடர்பிருப்பதாக கனடா அரசு குற்றம்சாட்டி பரபரப்பை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக நம்பகத்தகுந்த ஆதாரங்கள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டியது. குறிப்பாக கனடா அதிபர் ஜஸ்டின் ட்ரூடோ நேரடியாகவே குற்றம்சாட்டி இருக்கிறார். இது இந்திய அரசை பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது.

இந்தக் கொலை தொடர்பான விசாரணை நடைபெற்று வந்த நிலையில், இந்தக் கொலையில், இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவில் உள்ள துணைத் தூதர் அபூர்வா வஸ்தவா ஆகியோருக்கு தொடர்பிருப்பதாக, காலிஸ்தான் ஆதரவாளர்கள் ஒரு சில புகைப்படங்களுடன் போஸ்டர்களை ஒட்டியிருந்தனர்.

கனடா பிரதமரின் அறிக்கையை நிராகரிப்பதாகக் கூறியுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம், "கனடாவில் எந்தவொரு வன்முறைச் செயலிலும் இந்திய அரசாங்கத்தின் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டுவது அபத்தமானது, தூண்டிவிடப்பட்டது ஆகும். இதே போன்ற குற்றச்சாட்டுகளை கனடா பிரதமர் எங்கள் பிரதமரிடம் நேரிலும் முன்வைத்தார். அவை முற்றிலும் நிராகரிக்கப்பட்டன" என்று தெரிவித்துள்ளது.மேலும் கனடாவில் இந்தியாவுக்கு எதிரான தேசத்துரோக செயல்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

### கனடா - இந்தியஉறவு விரிசல் பற்றி பேராசிரியர் கிளாட்சன் சேவியர் கருத்து

கனடா - இந்திய உறவுகளில் முன்னெப்போதும் இல்லாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் இது நீண்ட காலத் தாக்கங்களைக் கொண்டதாக இருக்கும் என்றும் கருதுகிறார். சென்னைல யோலா கல்லூரியின் பேராசிரியரான க்ளாட்ஸன்சேவியர்.

"கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு என்பது ஆழமான, நீண்டகால உறவு. எனக்குத் தெரிந்து இது போன்ற நிலை இதுவரை ஏற்பட்டதாக தெரியவில்லை. எப்போதுமே கனடாவும் இந்தியாவும் பரஸ்பரம் நெருக்கமான உறவுகளைக் கொண்ட நாடுகளாகவே இருந்திருக்கின்றன.

கனடா - இந்திய உறவுகளைப் பொறுத்தவரை இரு பரிமாணங்களைக் கொண்டது. ஒன்று, மக்களை அடிப்படையாகக் கொண்டது. இரண்டாவது பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. உலகப் பொருளாதாரம் ஏற்கனவே தடுமாறி கொண்டிருக்கும்போது, இது போன்ற ஒரு பின்னடைவு இரண்டு நாடுகளுக்குமே நல்லதல்ல. இதில் பாதிப்பு இந்தியாவுக்கு அதிகமாக இருக்கும்.

அதேபோல, இந்தியர்கள் கனடாவில் அதிக அளவில் வசிக்கிறார்கள். டொரண்டோ, ஸ்காபரோ, மிஸஸாகா, வான்கூவர் ஆகிய பகுதிகளில் வசிக்கிறார்கள். பாதுகாப்பான நாடுகள் என்று பட்டியலிட்டால், அதில் முதலிடத்தில் இருக்கக் கூடிய நாடு கனடா. குடியேறிகளை வரவேற்று, அவர்களுக்கு வேலை வழங்கி, வாழ்வளிக்க கூடிய ஒரு நல்ல நாடு அது. மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் என பெரும் எண்ணிக்கையிலான இந்தியர்கள் அங்கே வேலை செய்கிறார்கள்.

படிப்பதற்கென்று சென்று, அதை முடித்த பிறகு அங்கேயே வேலை வாங்கி, குடியுரிமை பெற்றவர்களும் இருக்கிறார்கள். ஆகவே இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான கலாசாரப்பாலம் என்பது மிகவும் ஆழமானது. விசாக்களைப் பொறுத்தவரை இதுவரை தெளிவான முடிவுகள் ஏதும் எடுக்கப்படவில்லை. இந்தியர்களுக்கு விசா வழங்குவதை கனடா குறைத்தால் பெரும் பாதிப்புகள் இருக்கும்" என்கிறார் க்ளாட்சன்சேவியர்.

### ஜஸ்டின் ட்ரூடோ தீவிரத்தின் பின்னணி என்ன?

கனடா நாட்டுப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் செயற்பாடுகளுக்குப் பின்னால் உள்நாட்டுக் காரணிகளும் இருக்கின்றன என்கிறார் அவர். "எந்த நாட்டிலுமே தன் பிரஜைகளை இன்னொரு நாடு வந்துதாக்கியதாக சந்தேகம் ஏற்பட்டாலோ அதற்கான ஆதாரம் இருந்தாலோ சும்மா இருக்காது. கனடாவும் அப்படித்தான் கருதும். ஆகவே, இப்போது நடந்திருக்கும் விடயத்தை தனது இறையாண்மைக்கு விடப்பட்ட சவாலாகத்தான் கனடா கருதுகிறது.

இதுதவிர, சமீபகாலமாக ட்ரூடோவின் செல்வாக்கு உள்நாட்டில் சரிந்து வருகிறது. பலபிரச்சினைகளை அவரால் சமாளிக்க முடியவில்லை எனக் கருதுகிறார்கள். அடுத்த தேர்தலில் அவர் வெற்றி பெற்றுவருவாரா என்ற நிலை தான் இருக்கிறது. அதனால், ஏதாவது செய்து தன்னை நிரூபிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார் ட்ரூடோ. அதுவும் கூட, அவருடைய கடுமையான செயற்பாட்டிற்குக் காரணமாக இருக்கலாம்" என்கிறார் சேவியர்.

கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள நெருக்கமான கலாசார உறவுகள் இந்த மோதலால் பாதிக்கப்படுவது வருத்தமளிக்கிறது என்கிறார் அவர். பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் இங்கிருந்து சென்று அங்கு படிக்கிறார்கள். பிறகு அங்கே குடியேறிவிடுகிறார்கள். மேலும், இந்தியர்கள் இந்தியப் பண்டிகைகளை இங்கே கொண்டாடுவதை விட அங்கே விமர்சையாகக் கொண்டாடுவார்கள். அதேபோல, பல இந்தியர்கள் கனடாவில் மக்கள் பிரதிநிதிகளாகவும் இருக்கிறார்கள்.

இந்தியக் கலாசாரம் எப்படி அங்கே எதிரொலிக்கிறதோ, அதே போல பிரச்சினைகளும் அங்கே எதிரொலிக்கும். இங்கே ஏதாவது பிரச்சினை என்றால், அங்கிருந்து குரல் கொடுப்பது என்பது மிகவும் சாதாரணமாக நடக்கும். அப்படித்தான் ஸ்டான்சாமி விவகாரம் கூட அங்கே எதிரொலித்தது. இலங்கைத் தமிழர்களுக்குப் பிரச்சினை என வரும்போது அங்குள்ள நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வைத்தார்கள்.

ஆனால், இந்தியா ஒருவரைப் பயங்கரவர்தியாகக் கருதும் போது அவருக்கு கனடா அடைக்கலம் கொடுத்திருப்பது சரியா? இந்தக் கேள்வியை கனடா நாட்டின்பார்வையிலிருந்தும் பார்க்க வேண்டும்" என்கிறார் க்ளாட்ஸன் சேவியர்.

### இந்தியா - கனடா உறவின் எதிர்காலம் என்ன?

"இந்த நாட்டில் தேசத்துரோகியாக சொல்லப்படுபவர் இன்னொரு நாட்டில் புரட்சியாளராக பார்க்கப்படுவார். வெளிநாட்டில் இருக்கும் ஒருவர் மோசமான குற்றவாளி என இந்தியா கருதினால், சம்பந்தப்பட்ட நாட்டுடன் குற்றவாளிகளைப் பரிமாறும் ஒப்பந்தம் இருந்தால் அவரைத் தங்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பக் கோரலாம். இல்லாவிட்டால், அந்த நாடு அவரைத் திருப்பி அனுப்பத் தேவையில்லை.

ஆனால், இப்போது ராஜதந்திர ரீதியில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவு பொருளாதார பின்னடைவாகவும் மாற ஆரம்பித்திருப்பது சிக்கலான விடயம். இதனால் சாதாரண மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். இருநாடுகளுமே கொஞ்சம் பொறுத்திருந்து பதில் நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம். ஆனால் தற்போதைய காலகட்டத்தில் எதையும் உடனடியாகச் செய்தாக வேண்டியிருக்கிறது. ஆகவே ராஜதந்திர நடவடிக்கைகளும் அதற்கேற்ற படி மாறிவிட்டன. இது நீண்டகால நோக்கில் இரு நாட்டு உறவுகளை பாதிக்கும். இனி இரு நாடுகளும் என்ன செய்யப் போகின்றன என்பதில் தான் எதிர்காலம் இருக்கிறது" என்கிறார் க்ளாட்ஸன் சேவியர். இவ்வாறு நாள் தோறும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பின்வரும் கருத்தை பி.பி.சி தெரிவித்திருந்தது.

கனடா அரசின் அதிகாரபூர்வ தகவலின் படி, இந்தியா மற்றும் இலங்கையில் இருந்து சென்ற 3.1 லட்சம் தமிழர்கள் கனடாவில் குடியுரிமை பெற்று வசிக்கின்றனர். ஆண்டு தோறும் தமிழகத்தில் இருந்து ஆயிரக் கணக்கானோர் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்காக கனடா செல்கின்றனர். மேலும், இந்தியாவில் இருந்து ஆடைகள், காய்கறி, இறைச்சி, ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள், தென்னை நார் பொருட்கள் எனப் பலவகை பொருட்கள் கனடாவுக்கு ஏற்றுமதியாகிறது. கனடாவில் இருந்து நிலக்கரி சம்பந்தமான பொருட்கள் மற்றும் உரம் ஆகியவற்றை இந்தியா இறக்குமதி செய்கிறது.

இந்தியா-கனடா துணைத் தூதரகத்தின் அதிகாரபூர்வ தகவலின் படி, இந்தியாவில் இருந்து கனடாவுக்கு ஆண்டுக்கு 370 கோடி ரூபாய் வர்த்தகமும், கனடாவில் இருந்து இந்தியாவுக்கு 277 கோடி ரூபாய் மதிப்பிலான இறக்குமதி வர்த்தகமும் நடக்கிறது. இதில் கனடாவுக்கும் தமிழ் நாட்டுக்கும் வணிக ரீதியாக தொடர்புகள் உள்ளன.

இந்தியாவில் இருந்து கனடாவுக்கு ஆண்டுக்கு, 55 கோடி ரூபாய்க்கு மேல் பருத்தி, பட்டு போன்ற ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதியாகின்றன. இதில், 70 % திருப்பூர், ஈரோடு, கோவை மாவட்டங்களில் இருந்து தான் அனுப்பப்படுகின்றன.

அதேபோல், இந்தியாவில் இருந்து ஆண்டுக்கு 90 கோடி ரூபாய்க்கு அனுப்பப்படும் தென்னை நார் கட்டிகள், கயிறு, தென்னை நார் சம்பந்தமான பொருட்களிலும், 90% தமிழகத்தின் கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டு அனுப்பப்படுகின்றன.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுர...

காலை 8.45 மணியளவில் தேரில் ஆரோகணித்து வலம் வருவார்.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சமுத்திர தீர்த்தமும் மறு நாள் சனிக்கிழமை கேணி தீர்த்தமும் இடம்பெறும்.

ஆலயத்திற்கான போக்குவரத்து ஒழுங்குகள் வழமைபோல் இடம்பெறும் எனவும் அடியார்கள் தங்க ஆபரணங்களை அணிந்து வருவதை தவிர்க்குமாறும் ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (ம-7,60)

## இந்திய...

டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

"சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டினை கடற்படையினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர்.

எனினும் இந்திய மீனவர்களைக் கைது செய்யும் செயற்பாட்டில் இலங்கை கடற்படையினர் தயக்கம் காட்டுகின்றனர் என்றார். (ம-7,33,104)

## தமிழக...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத் தலைவரான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை பாதிக்கும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு கடற்றொழில் சமாசப் பிரதிநிதிகளினால் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதாவது, சக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா சென்று இந்த விடயம் தொடர்பில் தமிழக தலைவர்களுடன் கலந்துரையாடி உண்மையான நிலைமையினை அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும்எனவும் அதற்கு சக தமிழ் உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்கள் என நம்புவதாகவும் தெரிவித்தார். (ம-7,33,104)

## மதுபானசாலை...

சி.வி.கே.சிவஞானம்கோரிக்கை விடுத்தபோதிலும் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தெல்லிப்பளையில் புதிதாக மதுபானசாலை ஒன்று அமைக்க எடுத்த முயற்சிக்கு பொதுமக்களின் எதிர்ப்பு காணப்பட்டமை தொடர்பில் விவாதிக்கப்பட்டபோதே வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் மேற்படி கோரிக்கையினை முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் மதுபானசாலைகள் போதுமான அளவு உள்ளது. இனி யாழ்.மாவட்டத்திற்கு மதுபானசாலைகள் எதுவும் புதிதாக தேவையில்லை. புதிய மதுபானசாலைகளுக்குரிய அனுமதியினை வழங்கக் கூடாது என தீர்மானிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

குறித்த விடயத்தில் தலையிட்ட வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ்.மாவட்டத்திற்கு எத்தனை மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்க முடியும் என்ற ஒரு நியதி உள்ளது. அதனை பரிசீலித்து தான் தீர்மானிக்க முடியும் என தெரிவித்த தற்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் 146 மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்க முடியும் என்றும் அதாவது கள்ளுத் தவறணைகளையும் சேர்த்து எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவைத் தலைவரின் தீர்மானம் கைவிடப்பட்டது. (ம-7,33,104)

## தங்கம்...

பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைத்திருப்பதாக நம்பப்படும் கடற்கரை பகுதி ஒன்றில் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த நம்பதகுந்த இரகசிய தகவலையடுத்து குறித்த பகுதியில் அகழ்வு பணிகள் கடந்த 25ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மூன்றா[illegible]

கனரக இயந்திரம் கொண்டு அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த அகழ்வுப்பணியின்போது தொல்பொருள் திணைக்களம் பிரதேச செயலகம் கிராம சேவையாளர் தடயவியல் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் இராணுவத்தினர் மற்றும் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணியின்போது கடற்கரையில் காணப்பட்ட குறித்த பகுதியானது முற்றுமுழுதாக அகழப்பட்டுள்ளதுடன் அதில் நின்ற மரங்கள் முற்றாக அகற்றப்பட்டு 15க்கும் மேற்பட்ட பனை கன்று வடலிகளும் அகற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு தோண்டப்பட்ட நிலையில் நேற்று மாலை 5.45 மணி வரை அகழ்வுப் பணிகள் நீடிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த இடத்தினை மூடுமாறு நீதிபதி பணித்திருந்தார்.

குறித்த பகுதியில் 13 அடி ஆழமும் 17 மீற்றர் நீளம் வரை தோண்டப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து குறித்த பகுதி மூடப்பட்டுள்ளது. (ம-7,299)

## திருமலையில்...

திருகோணமலை இலுப்பைக்குளம் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர்ப்பலகை நடப்பட்டுள்ள பகுதியில் இரகசியமான முறையில் இரவு வேளைகளில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

திங்கட்கிழமை இரவு சில கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பகுதியில் விகாரையின் கட்டுமானப் பணிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநரினால் தடை விதித்து தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அப்பகுதியில் இரகசியமான முறையில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மக்கள் அதிருப்தி வெளியிடுகின்றனர்.

குறித்த பகுதியில் விகாரையின் கட்டுமானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இம்மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடு[illegible]

இதன்பின்னர் 09ம் திகதி காலை மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் குறித்த பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டிருந்தது.

சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத பகுதியில் குறித்த விகாரை அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவ்தாகவும், இச்செயற்பாடானது இனங்களுக்கிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன், குறித்த விகாரைக்கான பணிகளை இடைநிறுத்தக்கோரி ஆளுநரினால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர். (ம-7)

## தையிட்டி...

யும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ம-7,104)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2023/09/27
சீட்டிழுப்பு இலக்கம் 5250
P 3 3 9 2 4 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3492
சீட்டிழுப்பு திகதி 27.09.2023
I 09 30 64 76
I 11745

தன நிதானய
திகதி - 2023.09.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1280
W 34 71 78 80 W
40666

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.09.27
சீட்டிழுப்பு இலக்கம் 559
கும்பம் 13 37 43 62 கும்பம்

மெகா பவர்
திகதி 27/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1598
F 03 24 29 72 76
48905

Lucky 7
திகதி 27.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0076
L7 இலக்கம் 3 8
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 1 5 7 8 9 7

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2224
வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.09.27
தினம் புதன்கிழமை
09 27 53 65 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,202,756.40
68369 747

சனிதா
திகதி 2023.09.27 வெற்றி வாரம் 4385 வர்ணம் ஊதா
01 27 43 54 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,849,356.00
30688 623

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3936
வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.09.27
தினம் புதன்கிழமை
15 19 25 36
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,177,324/-
74443 378

கப்றக
27.09.2023 வெற்றி வாரம் 1400
Y 39 06 10 44 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 445,183,834.20
35775 239
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
திகதி 2023.09.27 வெற்றி வாரம் 1960 வர்ணம் மஞ்சள்
10 18 30 61 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 46,242,703.20
20360 969

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2050
சீட்டிழுப்பு திகதி : 2023.09.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,634,112/-
20 24 50 55 N
26162 212


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவு இயந்திரம் தேவை

நல்ல நிலையிலுள்ள உழவு இயந்திரம் தேவை. பெட்டி மற்றும் கலப்பை விரும்பத்தக்கது.
(விற்க உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்)

T.P: 075 719 0110

## காணி விற்பனைக்கு

இருபாலையில் 32 பரப்புகாணி விற்பனைக்கு உண்டு. பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்தியில் இருந்து கிழக்குப் பக்கமாக இருபாலைக்குச் செல்லும் வீதியில் 700m தூரத்தில் வீதி ஓரமாக இக்காணி அமைந்துள்ளது. இதன் மறு எல்லையில் நீர்ப்பாசனக்குளம் உள்ளதுடன் காணிக்குள் 2 வெட்டுக்கிணறுகளும் காணப்படுகின்றது.

தொ.இல - 077 181 5027
வட்ஸ்அப் - +4915754710178 (17258)

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7317)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


# பொருளாதார...

முதலாவது மீளாய்வு குறித்த கலந்துரையாடலுக்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு கொழும்பில் நேற்று கூடியது.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகள் குழுவுடன் இலங்கை அதிகாரிகள் செப்டம்பர் 14 ஆம் திகதி முதல் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று மாலை இலங்கை மத்திய வங்கியில் ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த சந்திப்பில் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் Peter Breuer மற்றும் Katsiaryna Svirydzenka ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, நாட்டின் ஸ்திரத்தன்மைக்கான ஆரம்ப அறிகுறிகள் இருந்தபோதிலும், முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை என சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வுக் குழு தெரிவித்தது.

எவ்வாறாயினும், இலங்கை மக்கள் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்து தற்போது மீண்டு வருவதாகவும், கடினமான, மிகவும் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாகவும் Peter Breuer இதன்போது தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு செப்டம்பரில் பணவீக்கம் 70 சதவீதத்தை விட அதிகமாக இருந்த போதிலும், 2023 செப்டம்பரின் இதுவரையில் பணவீக்கம் 2 சதவீதம் வரை குறைவடைந்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த ஆண்டு மார்ச் தொடக்கம் ஜூன் மாத காலத்தில் மொத்த சர்வதேச கையிருப்பு 1.5 பில்லியன் டொலர் வரையில் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார ஸ்திரத்தன்மை தென்படுகின்ற போதிலும் முழுமையான பொருளாதார ஸ்திரத்தன்மை இதுவரை உறுதி செய்யப்படவில்லை எனவும் peter Breuer தெரிவித்தார்.

அரசாங்கம் கட்டமைப்பு சீர்திருத்தங்களில் அதிகளவான முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாகவும், புதிய மத்திய வங்கிச் சட்டம் மற்றும் ஊழல் எதிர்ப்பு சட்டம் உட்பட பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய சட்டங்கள் திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டால், நிர்வாகத்தை மேம்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச கடன் வழங்குனர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதன் மூலம் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதில் அதிகாரிகள் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழு பிரதானி Peter Breuer மேலும் குறிப்பிட்டார். (ம-7)


VILLAGE HOTEL JAFFNA EXPRESS
பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=



(17019)
T.P: 077 544 8503


# 13 பேருக்கு...

இடமின்றி நிரூபிக்கப்பட்டதை அடுத்து 13 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கூரிய ஆயுதங்களால் வெட்டி நபர் ஒருவரைக் கொன்ற குற்றச்சாட்டில் குற்றம் சாட்டப்பட்ட எட்டு பிரதிவாதிகளுக்கு களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன நேற்று புதன்கிழமை (27) மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை கடந்த 2019 நவம்பர் 2 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாளொன்றில் 152 கிலோ கிராம் ஹெராயின் போதைப்பொருளை டோலர் படகின் மூலமாக இலங்கைக்குக் கொண்டு வந்த வேளை, இலங்கை கடற்படையினரால் நடுக்கடலில் வைத்து கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஐவருக்கும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பண்டார பலல்லே மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முறைப்பாட்டாளரினால் எவ்வித மான சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என தீர்மானித்த நீதிபதி, பிரதிவாதிகளின் இந்த செயற்பாட்டால் சமூகத்தில் ஏற்படும் ஆபத்தான நிலைமையை கருத்தில் கொண்டு பிரதிவாதிகளுக்கு இவ்வாறு தண்டனை வழங்கி தீர்ப்பளிப்பதாக தெரிவித்தார். (ம-7)

(மேலும் ஒரு செய்தி உள்ளே)


## விசா விண்ணப்பம்

கனடா பிரான்ஸ் லண்டன்

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா, பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

ருமேனியா, கனடா வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுத் தரப்படும்

தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.
NSA Group of Company (Pvt) Ltd.
197, Main Street, Jaffna.
குறிப்பிட்ட விசா மாத்திரம் கையிருப்பில் உள்ளது.
முற்பதிவுகள் அவசியம்.
(நிபந்தனைக்குட்பட்டது) (17264)
077 266 6429, 021 221 0599
077 877 4838

## வேலையாட்கள் தேவை

No.197 Main street Jaffna
எனும் இடத்தில் இயங்கி வருகின்ற
N.S.A Group of company (pvt) Ltd க்கு
உடனடியாக பணியாளர்கள் தேவை.
Ticketing, Travel, Visa Consultant
அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.
ஆங்கில அறிவு முக்கியம். பெண்கள் விரும்பத்தக்கது. (யாழ். பிரதேசத்திற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.)
Note - சுயவிபரக்கோவையை 021 221 0599 இந்த இலக்கத்திற்கு வாட்ஸ்அப் செய்யவும்.
சனிக்கிழமை 30.09.2023
காலை 10.30 – 12.30 மணிவரை
தொடர்புகளுக்கு : (17263)
021 221 0599, 077 266 6429
077 877 4838

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (17227)

## வாகனம் தேவை

சிறிய கூலர் வாகனம் (Cooler Vehicle) விற்பனைக்கு அல்லது நாள் வாடகைக்கு தேவை.
தொடர்பு (17266)
077 805 9586

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு
077 623 4204
076 755 8606
077 076 0389
(17267)

## ஆசிரியர்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் பாடங்கள் கற்பிக்கக் கூடிய அனுபவமும் திறமையும் உள்ள ஆசிரியர்கள் உடன் தேவை.
தரம் - 6,7,8 - தமிழ்மொழி, வரலாறு
தரம் - 9,10,11 - விஞ்ஞானம்
தொடர்புகளுக்கு : (17263)
077 459 8440

## விற்பனைக்கு

விறகு மரங்கள், விறகுகள் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : (17262)
077 908 4823

## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு
*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



(C-7341)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777

## WORK IN UK

WORK PERMITS
CONSTRUCTION WORKERS
- 5 YEAR WORK PERMITS
- குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

✓ BRICK LAYERS ✓ SHUTTERING CARPENTERS
✓ SHUTTERING JOINERS ✓ STEEL FIXERS
✓ ELECTRICIANS ✓ PLUMBERS
✓ STEEL ELECTORS FOR STRUCTURES
போன்ற துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்
மாணவர்களும், கட்டுமானத்துறையில் அனுபவமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்
CIMS COLLEGE 0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.131, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org